இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 149 | இதழ் : 15 | திகதி : 02.11.2025 | விலை : 50.00

## வத்திக்கான் வெளிவிவகார அமைச்சர் பேராயர் போல் ரிச்சர்ட் கல்லாகர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம்

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டட வத்திக்கான் வெளிவிவகார அமைச்சர் பேராயர் போல் ரிச்சர்ட் கல்லாகரை வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அருன் ஹெமச்சந்திர வரவேற்றுள்ளார். இரு நாடுகளுக்கிடையிலான நம்பிக்கை, மற்றும் மோதல்களுக்குப் பின்னரான நல்லிணக்கத்திற்கு ஆதரவழித்தல் போன்ற திருச்சபையின் தொடர்ச்சியான ஈடுபாட்டை இந்த விஜயம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இலங்கைக்கும், வத்திக்கானுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் ஐம்பதாவது ஆண்டின் நிறைவை முன்னிட்டு இந்த விஜயம் இடம்பெற்றுள்ளது. பேராயர் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் ஜனாதிபதி,பிரதமர் மற்றும் சிரேஸ்ட அதிகாரிகளைச் சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் பகிரப்பட்ட மனிதாபிமான முன்னுரைகள் குறித்துக் கலந்துரையாடுவர். அதேவேளை ஐந்து தசாப்தகால இராஜதந்திரப் பங்களிப்பைக் கொண்டாடும் வகையிலான நினைவுப் பேருரை நிகழ்த்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் 2019ம் ஆண்டு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட ஆலயங்களைப் பார்வையிடுவது மற்றும் நாடு முழுவதுமுள்ள தேவாலயங்களைப் பார்வையிடுவது, ஏனைய மத கலாச்சார இடங்களைப் பார்வையிடுவது போன்றவை திட்டங்களாகும். இவை பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலாகவும், சர்வமத நல்லிணக்க ஆதரவையும் வலியுறுத்ததுகின்றது.



## நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் முப்பொன் விழா




நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் பிறப்பின் முப்பொன் விழா ஆண்டு நிறைவு நிகழ்வு ஐப்பசி மாதம் 26ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், யாழ். மறைமாவட்டம் மற்றும் யாழ். மாகாண அமலமரித்தியாகிகள் இணைந்து முன்னெடுத்த இந்நிகழ்வில் காலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆய்வரங்கும் தொடர்ந்து மாலை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. யாழ்ப்பாண தமிழ் சங்கத் தலைவர் ப.2

## ஆயருடனான சந்திப்புக்கள்



இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்ற அங்கத்தவர்கள் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இச்சந்திப்பு ஐப்பசி மாதம் 30ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. அத்துடன் இலங்கைக் கடற்தொழில் அமைச்சர் திரு. சந்திரசேகரன் தலைமையிலான வைத்தியர்களும் ஆயர் அவர்களை ஐப்பசி மாதம் 28ஆம் திகதி ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினர். இச்சந்திப்பில் போதைப்பொருள் பாவனையின் தாக்கம் பற்றியும் அதற்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

## இறையடியார் வண. வ. அ. தோமஸ் அ. ம. தி அடிகளாரின் மறைமாவட்ட நினைவு



மறைந்த முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தமது திருமடல் வழியாக 2024ம் ஆண்டு இறையடியார்களின் நினைவுநாளை ஜூபிலி ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 9ம் திகதி திரு வழிபாட்டில் நினைவுகூர அனுமதி அளித்தார்.

அதன்படி இந்த நவம்பர் மாதம் 9ம் திகதி ஞாயிறு திருப்பலியில் யாழ். மறைமாவட்டத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும் இந்தவேண்டுகோள் நிறைவேற்றப்படும். இறையடியார் தோமஸ் அடிகளாரின் புனித பட்டத்திற்காக அனைவரும் இறை வேண்டுதல் செய்வோம்.

## யாழ் பிரதான வீதியில் உலக உணவு தினம்




உலக உணவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட இரசாயன பாவனையற்ற உற்பத்திகளின் கண்காட்சியும் விற்பனையும் கடந்த 30ஆம் திகதி யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமடம் முன்பாக நடைபெற்றது. நிறுவன இயக்குநர் அருட்தந்தை அன்ரோ டெனீசியஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட செயலர் திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து விற்பனை நிலையங்களைத் திறந்துவைத்ததுடன் யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமட அதிபர் அருட்தந்தை செல்வரட்ணம், ரலீம் மௌலவி, சர்வமதப்பேரவை அங்கத்தவர் ஸ்ரீலோகநாத குருக்கள் ஆகியோர் கலந்து ஆசியுரைகளையும் வழங்கியிருந்தனர்.

## யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் முன்னெடுக்கப்பட்ட "அதிபர் மற்றும் ஆசான்கள் தினம்"




யாழ். கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் முன்னெடுக்கப்பட்ட "அதிபர் மற்றும் ஆசான்கள் தினம்" கார்த்திகை மாதம் 01ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் அருள்முனைவர் இருதயநாதர் தயாபரன் அவர்களின் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து அன்றைய நாளின் சிறப்பு நிகழ்வாக தனது 50ஆவது அகவையை நிறைவுசெய்யும் அதிபர் அவர்களின் முனைவர்பட்ட ஆய்வு, நூலாக வெளியிடப்பட்டது. பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் நூலை வெளியிட்டு வைத்தார். இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வரும் புனித சவேரியார் இறையியல் நிறுவகத்தின் இயக்குநருமான அருட்தந்தை ஜெபரட்ணம், குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மற்றும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், கல்லூரிப் பணியாளர்கள், குரு மாணவர்களென பலரும் கலந்துகொண்டனர்.

வெளிவந்துவிட்டது!

பாதுகாவலன்

திருவிவிலிய நாட்குறிப்பேடு

2026 ஆம் ஆண்டுக்கான திருப்பாடல்களுடன் கூடிய திருவிவிலிய நாட்குறிப்பேடு




பிரதி 600/- மட்டுமே!

வீட்டிற்கோர் நாட்குறிப்பேட்டினை வாங்கி இறைவார்த்தையில் வாழ்வோம்!

கிடைக்குமிடம்:

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
360 பிரதான வீதி
யாழ்ப்பாணம்

பங்குத்தந்தையர்களூடாக உங்கள் பங்கிற்குத் தேவையான பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்

021 222 2378

# எமது எண்ணம்

## மக்களுக்காக சிந்திக்க வேண்டிய அரசியல் பிரதிநிதிகள்

சமகால அரசியல் - பொருளாதார நிலைமைகள் ஆரோக்கியமாக இருக்கின்றன. பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீண்டு வருகிறது என்று அரசாங்கம் கூறுகின்றது. இலங்கை மத்தி வங்கியும், பொருளாதார முன்னேற்றம் தொடர்பாகச் சாதகமான கருத்தை வெளியிட்டிருக்கிறது.

பொருளாதாரம் உரிய முறையில் இருந்தால் மாத்திரமே மக்களின் அடிப்படை வாழ்க்கைத் தரமும் உயரும். போரின் பின்னரான சூழலில் வடக்குக் கிழக்கில் இன்று வரை வறுமைப்பட்ட மக்கள் வாழ்கின்றனர்.

பல குடும்பங்களில் பொருளாதார நெருக்கடி உண்டு. பிள்ளைகள் கல்வி கற்க வசதியில்லாத நிலைமைகளும் இல்லாமலில்லை. ஆகவே இலங்கை மேலும் முன்னேற வேண்டுமாக இருந்தால் அரசியல் ஸ்திரத்தன்மை முக்கியமாகிறது.

இன நெருக்கடியை ஒழிக்க நிரந்தர அரசியல் தீர்வு முக்கியமாகின்றது. ஆனால் அது பற்றியெல்லாம் திட்டங்கள் இருப்பதாக அரசாங்கம் கூறுகின்றது. இருந்தாலும் குறைந்த பட்சம் 13 ஆவது திருத்தச் சட்டத்தைக் கூட அமுல்படுத்த முடியாத சூழல் நிலவுகின்றது.

ஆகவே அரசாங்கம் என்பதைக் கடந்து, அனைத்து அரசியல் கட்சிகளும் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஒருமித்த குரலில் சிந்திக்க வேண்டும். வெறுமனே அவ்வப்போது கட்சி அரசியல் ரீதியாக எழும் சிந்தனைகளை மக்களுக்கு வெளிப்படுத்தி வாக்கு அரசியல் நடத்துவதை நிறுத்த வேண்டும்.

பொருளாதார நிலைமை சுமூகமாக இருக்கிறது என்று அரசாங்கம் சொல்லாம். ஆனால் அதன் உண்மைத் தன்மை பற்றி மக்களுக்குத் தெரியாது. அது பற்றிய விளக்கம் சாதாரண மக்களுக்கு இருக்காது. எதிர்க்கட்சிகள் சொல்வதைத் தான் கேட்க வேண்டும். ஆனால் எதிர்க்கட்சிகளும் உண்மையைப் பேசுகிறார்களா?

ஆகவே கட்சி அரசியலை கடந்து சகல அரசியல் கட்சிகளும் சிந்திக்க வேண்டும். ஊழல் மோசடி என்று குற்றம் சுமத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் பலர் கைது செய்யப்படுகின்றனர் போதைப் பொருள் கடத்துவதாகக் கூறி வேறு சிலர் சுட்டுக்கொல்லப் படுகின்றனர்.

இது பற்றி நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதிகளுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் கோருகின்றன. அரசாங்கம் பாதுகாப்புத் தருவதாகக் கூறுகிறது. ஆனால் அதில் நம்பிக்கை இல்லை என எதிர்க் கட்சிகள் வாதிடுகின்றன.

ஆகவே தற்போதைய நிலையில் என்ன நடக்கிறது என்பது பற்றி மக்கள் குழப்பமடைந்துள்ளனர். இப் பின்னணியில் அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி மாபெரும் பேரணி ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

ஆனால் எதிர்க்கட்சிகள் மத்தியிலும் ஒற்றுமை இருப்பதாக தெரியவில்லை. அரசாங்கத்துக்கு எதிராக கருத்தில் வரும் பிரதான எதிர்க்கட்சிகள் பலவீனம் அடைந்துள்ளன.

எதிர்ப்புப் போராட்டத்தில் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி பங்கெடுக்காது என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா அறிவித்திருந்தார்.

அதேபோன்று, மக்கள் போராட்ட முன்னணியும் இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் பங்குகொள்ள முடியாது என்று அறிவித்துள்ளது.

அதாவது, இலங்கைத்தீவை ஊழல் மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் போன்ற குற்றச் செயல்களுக்கு உள்ளாக்கிய முன்னாள் ஆட்சியாளர்களுடன் இணைந்து பயணிக்க முடியாது என்பது அவர்களின் வாதமாக உள்ளது.

மக்கள் போராட்ட முன்னணியின் மறுப்பில் நியாயம் உள்ளது. ஏனெனில், முன்னாள் ஆட்சியாளர்கள் தான் ஒட்டுமொத்த இலங்கைத்தீவின் அரசியல் - பொருளாதாரம் ஆகியவற்றின் பின்னடைவுக்குக் காரணம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

பொருளாதார நெருக்கடி எழுவதற்கும் இவர்களது கட்சிகளின் 76 வருட ஆட்சிதான் காரணம்.

இன முரண்பாட்டுக்கு உரிய தீர்வு ஏற்படாமல் வெறுமனே இனவாதம் பரவுவதற்கு இவர்கள் தான் காரணம் என்றும் தெரியும்.

இப் பின்னணியில் ,மக்கள் போராட்ட முன்னணி அவர்கள் நடத்தும் எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொள்ள முடியாது என்பது நியாயமானது.

ஆகவே ஊழல் மோசடி செய்ததாகப் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள முன்னாள் ஆட்சியாளர்கள், அதாவது தற்போதைய பிரதான எதிர்க்கட்சிகள், குறைந்த பட்சம் இந்த அரசாங்கத்தின் பதவிக் காலத்திற்கு சந்தர்ப்பம் கொடுப்பது சிறந்தது.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

## அருட்சகோதரி மரிய ட்ரொங்காத்தி அவர்களின் புனித நிலைக்கான நன்றித்திருப்பலி

திருத்தந்தை 14ஆம் லியோ அவர்களால் கடந்த 19ஆம் திகதி புனிதராகத் திருநிலைப்படுத்தப் பட்ட சலேசிய டொன் பொஸ்கோ சபை அருட்சகோதரி மரிய ட்ரொங்காத்தி அவர்களின் புனித நிலைக்கான நன்றித்திருப்பலி கடந்த 23ஆம் திகதி யாழ். மறை மாவட்டத்தில் நடைபெற்றது.

சபையின் இலங்கைக்கான பிரதிநிதி அருட்சகோதரி லாசர் மரிய நிர்மலா அவர்களின் வழி நடத்தலில் சபையின் யாழ்ப் பாணம், உரும்பிராய், மணியந் தோட்டம் மற்றும் ஓமந்தை கன்னியர் மடத்தின் அருட்சகோதரிகளின் ஒழுங்குபடுத்தலில் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இடம்பெற்ற திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். இத்திருப்பலியில் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், அமலமரித் தியாகிகள் சபை யாழ். மாகாண முதல்வர் அருட்தந்தை போல் ஜெயந்தன் பச்சேக், அருட்தந்தையர்கள்,அருட்சகோதரிகள், இறைமக்களென பலரும் கலந்து கொண்டனர்.

1883ஆம் ஆண்டு பிப்ரவரி 16ஆம் திகதி இத்தாலியின் கோல்கி நகரின் கொர்டேனோ எனும் ஊரில் பிறந்த அருட்சகோதரி மரிய ட்ரொங்காத்தி அவர்கள் 1905ஆம் ஆண்டு கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் புதல்வியர்கள் சபையில் இணைந்து, துறவறப்பயிற்சியினை மேற்கொண்டார்.

தொடர்ந்து 1908ஆம் ஆண்டு தனது முதல் வார்த்தைப்பாட்டை நிறைவேற்றி 1922ஆம் ஆண்டு எக்குவடோருக்கு மறை பரப்புப் பணியாளராகச் சென்று, அமேசான் காட்டில் வாழும் பழங்குடி மக்களுக்கு 40 ஆண்டுகளுக்கும் மேலாக இறை பணியாற்றினர். மருத்துவ, கல்வி, மற்றும் ஆன்மீகப் பணிகள் ஊடாக மக்களுக்கு இரக்கத்தையும், அன்பையும் பொழிந்த புனித மரிய ட்ரொங்காத்தி 1969ஆம் ஆண்டு, ஆவணி மாதம் 25ஆம் திகதி விமான விபத்தில் உயிரி ழந்தார். இவர் 2012ஆம் ஆண்டு திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்களால் அருளாளர் பட்டம்பெற்று 2025ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களால் புனிதர் பட்டத் தையும் பெற்றுக்கொண்டார்.


### விண்ணக பிறப்பின் 13ம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 12 . 10 . 1979

விண்ணில் 14 . 11 . 2012



குருத்துவம் 18.05.2011

**அமரர் அருட்பணி கீதபொன்கலன் லக்ஸ்மன்**

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள்
எல்லாம் நான் குடியிருக்க வேண்டும். (தி.பா.27:4)

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்

(Ad-111)

### மரண அறிவித்தல்

அன்னை மடியில் 04 . 04 . 1946

இறைவன் அடியில் 27 . 10 . 2025



**திருமதி இசிடோறா பிறிம்றோஸ் பொனவெஞ்சர்**

நீர்கொழும்பைப் பிறப்பிடமாகவும் நியூசிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இசிடோறா பிறிம்றோஸ் பொனவெஞ்சர் 21.10.2025 இல் இறைவன் அடிசேர்ந்தார். இவர் பொனவெஞ்சரின் அன்பு மனைவியும் திருமதி சுகன்யா டைசனின் (சுகி) அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்கு 30.10.2025ல் நியூசிலாந்தில் நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம்

'நிலாமுற்றம்'
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

தகவல் : திரு.திருமதி பிளசி அருமைநாயகம்
மைத்துனி


## யாழ். பிரதான வீதியில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் வேல்நம்பி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற ஆய்வரங்க நிகழ்வில் முப்பொன் விழா ஆய்வரங்க மலர் வெளியீடும் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தலும் நடைபெற்றன. பொன்விழா மலரை யாழ். பல்கலைக் கழக மொழியியல் துறை ஓய்வுநிலை பேராசிரியர் கலாநிதி சுபதினி ரமேஸ் அவர்கள் வெளியிட்டுவைத்தார்.

இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. சந்திர மௌலீசன் லலீசன், யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை தமிழ்நேசன், அமலமரித்தியாகிகள் சபை யாழ். மாகாண முதல்வர் அருட்தந்தை போல் ஜெயந்தன் பச்சேக், ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாலைநிகழ்வுகள் அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் தலைமையில் நடைபெற்றதுடன், வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக யாழ். திருமறைக்கலாமன்றக் கலைஞர்களின் சுவாமிஞானப்பிரகாசரின் வாழ்வை சித்தரிக்கும் "தமிழ் மறைத்தூதன்" நடன அளிக்கையும் மேடையேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் யாழ்ப் பாணம், மன்னார் மறை மாவட்டக் குருமுதல்வர்கள், அமல மரித்தியாகிகள் சபை யாழ். மாகாண முதல்வர், பேராசிரியர் கலாநிதி சுபதினி ரமேஸ் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்களென பலரும் கலந்து கொண்டனர்.


### விண்ணக வாழ்வின் 31ம் நாள்

பிறப்பு 15 . 06 . 1959

இறப்பு 19 . 10 . 2025



**அமரர். பீற்றர் மரிய கொறற்றி**

'உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்'(யோவான் 11:25)

றொறன்ரோ. கனடா

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

AD-112

# கரங்களில் எதை ஏந்துகின்றோம்





அருட்பணி அன்ரனி பாலா

(சென்றவாரத் தொடர்ச்சி..)
மேலும் ரூத், யூடித், தெபோரா, சாராள், ரெபேக்காள் போன்ற விவிலிய வீராங்கனைகளைப்பற்றி மணிக்கணக்காக மறையுரையாற்றுகின்ற ஒருசில பிரிவினைச் சபைளும் அடிப்படைவாதக் குழுக்களும் அனைவருக்கும் அரசியான அன்னை கன்னிமரியாவை மட்டும் வெறுப்பதற்குக் காரணம் என்ன? எமக்கு முட்டை மட்டும் போதும், கோதை வீசலாமென்பது மரியாவிற்குப் பொருந்தாது. தம்பியோ தங்கையோ பிறந்தால் வைத்தியசாலையிலிருந்து தம்பியைத் தங்கையைத் தூக்கிக் கொண்டு வெளியே வரும் அப்பா, உங்களுடைய அம்மாவைத் தேவையில்லையென்று கைவிட்டுக் குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு வரலாமா? மாதாவை வெறுப்பவர்கள், செபமாலை செபிக்காதவர்கள், நிச்சயமாக சாத்தானின் ஊழியர்களே. பைபிளை மட்டும் தூக்கிப் பிடித்துக்கொண்டு கத்தோலிக்கத்தின் ஆணிவேராகிய நற்கருணையையும் நற்கருணைப் பேழையாகிய மரியாவையும் வெறுப்பவர்கள், 16ஆம் நூற்றாண்டில் இருந்து (பிரிவினையைத் தொடங்கிவைத்த மாட்டின் லூத்தர் கூட மரியாவை ஏற்றுக்கொண்டார்) இன்றுவரை வெவ்வேறு சபைகளாகப் பிரிந்து பிரிந்து செல்கின்றார்கள். ஒற்றுமை அங்கு இல்லை. கி.பி. 400 முதல் 1500வரை பல ஆய்வுகளுக்குப் பின்பு திருவிவிலியத்தைத் தொகுத்துக் கத்தோலிக்க மக்களுக்கு வழங்கியவர்கள் கத்தோலிக்க ஆயர்களே. அதற்கு முன்பு தொடக்கத் திருஅவையில் மறைசாட்சியர்களுக்குப் பெலமூட்டியதோடு, இன்றுவரை கத்தோலிக்க திருஅவையுள் ஒற்றுமையின் சின்னமாக விளங்குவது, நற்கருணையும் அவரை வயிற்றில் தாங்கிப் பேழையாக விளங்கும் மரியாவுமே. மரியாவின் திருச்செபமாலையைக் கண்டு சாத்தானே அஞ்சி நடுங்குகிறதென்றால் அமெரிக்க உளவுப்படைகளால் கத்தோலிக்கத்தை உடைக்க, உலகெங்கும் வாரி இறைக்கப்பட்டு உட்செலுத்தப்படுகின்ற பணத்தைப் பெற்றுக்கொண்டு வெவ்வேறு சபைகளாகப் பிரிந்து சென்று கொண்டிருக்கும் சபைகளின் இயக்குநர் சாத்தான் என்பது தெட்டத் தெளிவாகின்றது. ஏனெனில் ஒற்றுமையை ஏற்படுத்துவது நற்கருணை ஆண்டவர். பிரிவினையை ஏற்படுத்துவது சாத்தான். கத்தோலிக்கத்தை உடைத்துப் பிரிவினைகளை ஏற்படுத்துகின்ற சாத்தானின் ஊழியர்களும் வேதம் ஓதுவார்கள். வார்த்தையாகிய ,யேசுவையே அவர்கள் போதிக்கிறார்கள் என்றால் பிரிவினை இடம்பெறாது. எனவே நாங்கள் தான் கவனமாக இருக்க வேண்டும். ஒளிமயமாகும் எதிர்காலம் முதல் நன்மை பெற்றபோது பங்குத் தந்தையால் கொடுக்கப்பட்ட செபமாலை இன்று பலரது கைகளில் இல்லை. பெரும்பாலும் ஆண்கள் செபமாலையை ஏந்த முடியாதவர்களே. திருப்பலிக்கு முன்பு ஆயத்தமாகப் பல ஆலயங்களில் செபமாலை சொல்லப்படுவதில்லை. மேலும் செபமாலைக்கு வராமல் வீட்டில் இருந்துவிட்டுத் திருப்பலிக்குப் பலர் பாதியில் வருவதைக் காண்கின்றோம். இது சாத்தானின் வெருட்டல் இல்லாமல் வேறில்லை. பலருக்குத் திருச்செபமாலையைவிட பல விடயங்கள் முக்கியமாகின்றன. எம்முன்னோர்போன்று நாமும் மனதார விரும்பினால், மாதாவை நேசித்தால், செபமாலையைக் கரத்தில் ஏந்துவதை மனமொன்றித்துக் கட்டாயமாக்கினால் எம்மாலும் முடியும். இறையிரக்கமே பாவிகளாகிய எம்மெல்லோரினதும் கடைசிக் கதியாக இருக்கிற தற்காலத்தில் புனித மரிய பவுஸ்தீனா கொவாஸ்காவிற்கு (ஒக்ரோபர் 5) ,யேசு கூறிய "இயேசுவே நான் உம்மில் நம்பிக்கை வைக்கின்றேன்" என்ற வார்த்தைகளை, ஒவ்வொரு நொடியும் நாம் செபித்தால் நிச்சயமாக ஒரு செபமாலையல்ல, மாறாக 4 செபமாலைகளைச் செபிக்கமுடியும். நாளாந்தம் 4 அல்லது அதற்குமேல் செபமாலை செபிப்பவர்கள் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்வார்கள் என்பது எனது அன்றாட வாழ்வின் ஆனந்தக்கண்ணீர்



திருச்செபமாலையின் "அருள் நிறை மரியே" முழுவதையும் பொருளுணர்ந்து சொல்லும்போது சாத்தானின் தலையில் நாம் சம்மட்டியால் ஓங்கி அடிக்கின்றோம்.

அனுபவம். இன்று நீ பேஸ்புக்கில் குனிந்திருந்தாலோ, செல்போனுக்கு, ரீவி பார்ப்பதற்கு, தொலைக் காட்சி நாடகங்களுக்கு அடிமையாகினாலோ உன்னுடைய எதிர்காலம் இருண்டுவிடும். மாறாகத் எப்போதும் திருச்செபமாலையைக் கையிலேந்தி, மாதாந்தம் குடும்பத்துடன் நல்ல பாவறிக்கை செய்து, நாளாந்தம் திருப்பலியில் பங்குபற்றி, தகுதியுடன் நற்கருணை உட்கொண்டு, வாரமொரு தடவையாவது நற்கருணைச் சந்திப்பை மேற்கொண்டு, அன்றாடக் கடமைகளை அருள் நிறை மரியே செபத்துடன் நிறை வேற்றினால் உன்னுடைய எதிர்காலம் ஒளிமயமாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

விழிப்புணர்வுடன் வாழ்வோம் அனைத்திற்கும் நேரமுண்டு. ஆனால் செபமாலைக்கு மட்டும் நேரமில்லை என்பது நொண்டிச் சாட்டு. செபமாலையைக் கையில் ஏந்தும்போது மட்டும் பல விடயங்களைச் செய்யவேண்டியிருக்கே என்னும் எண்ணங்களோடு நித்திரையும் வரும், சோம்பலும் வரும். அடுத்த நிமிட விடயங்களை இறைவனே பார்த்துக் கொள்வார் என்ற நிகழ்கால மனநிலையில் மட்டும் வாழும் ஆழமான நம்பிக்கை தேவை. இதுதான் கத்தோலிக்க நம்பிக்கை. இது இன்று செத்துப்போச்சு என்பது பலரது வாதம். இறைவனால் தொடப்படும் வரைக்கும் எமது நம்பிக்கை செத்த நம்பிக்கையே. செபமாலை வேளையில் பலர் சந்திக்க வருவார்கள். அவர்களையும் வாருங்கள் செபமாலை சொல்வோம் என அழைக்கலாம் அல்லது இப்போது செபமாலையின் நேரம் பின்பு வந்து சந்திக்கிறேன் என்று சொல்லி அனுப்பலாம். தொலைபேசியைக் கொஞ்சம் நிறுத்தி வைக்கலாம். செபமாலை செபிப்பதைப் பின்போடுதல்கூடாது. அவ்வாறாயின் சாத்தானுக்கு நேரம் கொடுக்கின்றோம். இந்தக் குழப்பங்கள் எல்லாம் ஏன் ஏனைய நேரங்களில் வருவதில்லை?

### சாத்தானைச் சாகடிப்போம்

சாத்தான் தனது தலையில் ஓங்கி அறைய விடமாட்டான். தொநூ 3:15 இன் படி சாத்தான் அன்னை மரியாவாலும் அவளது வித்தாகிய இயேசுவாலும் நசுக்கப்பட்டுக் காயப்படுத்தப்பட்டுவிட்டான். எனவே அவன் ஆன்மாக்களைத் தன்பக்கம் இழுக்க, செபமாலை செபிக்காமல் இருக்க, தொடர் முயற்சி செய்கின்றான். எக்காலத்திலும் நாம் மீட்கப்பட முடியாதே என்னும் கொடுமையான எண்ணத்துடன் முடிவில்லாக் காலமும் நரகத்தில் தன்னோடு நாங்களும் குந்தியிருக்க வேண்டும் என்றே விரும்புகின்றான். எனவேதான் செய்வினைச் செப்புத் தகடாகிய சிம்காட்டை ஏந்தி அடிமையாகி விடாமல், தேவைக் கேற்ப மட்டும் விழிப்புணர்வுடன் பயன்படுத்தித் தூர வைத்துவிட்டு எப்போதும் செபமாலையைக் கையில் வைத்திருப்போம். நித்திரையில்கூட எனது வாயும் மனதும் அருள்நிறை மரியே சொல்லிக்கொண்டிருப்பது எனது ஆன்மீக அனுபவம். இவ்வாறு உலகளாவிய கத்தோலிக்கருடன் இணைந்து சாத்தானை ஓடவிரட்டிச் சாகடிப்போம். இறையரசின் மக்களாக வாழ்வோம். மூவொரு இறைவா போற்றி, அன்னை கன்னிமரியே வாழ்க.

# இன்றைய இளையோர்கள் நாளைய நம் நாட்டுத் தலைவர்கள்

### மாண்படைய பெண்மணிகள் நம் சமூகத்தின் கண்மணிகள்

சுழன்று வலம் வரும் எமது தாயகப் பூமியிலே
சுதந்திரமாக நாம் இங்கு சுபீட்சமாக வாழ்வதற்கு
இதயத்தின் ஆழத்தில் இதமான பண்புகள் வேண்டும்
இயற்கையை அன்பு செய்து இறையுணர்வில் வளர வேண்டும்
உள்ளத்தின் அடித்தளத்தில் உண்மைகள் உதிக்க வேண்டும்
ஊதாரித் தன்மைகளை உதறித்தள்ளி மிதிக்க வேண்டும்
மனுக்குலத்தின் மகத்துவத்தை மாண்புடன் மதிக்க வேண்டும்
மனிதநேயப் பண்புகளை எமது மனங்களில் விதைக்கவும்
மக்கள் மத்தியில் நாம் வாய் இனிக்கச் சொல்வதைவிட
மக்களின் வாழ்வு இனிக்க நாம் மனம் மகிழ்ந்து உழைக்கவும்
தவறுகள் செய்து தடம் புரளாமல் நேர்மை உள்ளத்துடன்
நல் நம்பிக்கையில் எந்நேரத்திலும் தளராத உறுதியுடன்
தன்மானம் நிறை தமிழர்களாகத் தரணியில் வாழவேண்டும்
அதிகாரம் தாங்குவோர் எம்மை அடக்கியும் ஆளலாம்
அன்புநெறி தவறி ஆணவ ஆக்கிரமிப்பில் மிதிக்கலாம்
வானம் வறண்டு பூமியில் வரட்சிகள் தொடரலாம்
வையகம் நலிந்து வஞ்சகப் பஞ்சங்கள் பரவலாம்
நாட்டின் மீது நுழைந்து ஏனைய நாடு போர் தொடுக்க
நாணயம் தவறியோர் நாட்டை விட்டு ஓடலாம்
அதேநேரம் கயமை உள்ளங்கள் காட்டியும் கொடுக்கலாம்
ஆதவன் உதயமாகாமல் காலங்கள் கடக்கலாம்
இளையோரே இங்கு தான் உங்களின் கடமை உணர்வுகள்
இறுதிவரை உறுதியான இலட்சியம் மலர வேண்டும்
ஆகையால் எப்போதும் ஆன்மீக விழிப்புணர்வு
ஆக்கங்கள் ஊக்கங்கள் அனுதினமும் வளர்க்க வேண்டும்
மாகளவு பொய் பேசாத மயக்கம் இல்லாத மனம் வேண்டும்
சாகாத புகழ் பூக்கும் சாதனைகள் படைக்க வேண்டும்
இன்முகம் காட்டும் இளையோராக
இன்புற்றிருக்க வேண்டி
இளையோர்களே உங்களை நாம்
இதயம் கனிந்து வாழ்த்துகின்றோம்



ம. தூசைமுத்து



# பிறந்தவர் இறக்கிறான்! இறந்தவன் பிறக்கிறான்!

இந்தோனேசியாவில் உள்ள டிரோஜா என்னும் பழங்குடியினர், பல நூற்றாண்டுகளாகத் தங்கள் குடும்பத்தில் இறந்தவர்களின் உடலைப் பதப்படுத்தி அலங்காரம் செய்து, தங்கள் வீட்டில் வைத்துவாழ்ந்து வருகின்றனர். இறப்பு என்பது, வாழ்க்கையில் நீண்டதொரு பயணம் என்று நம்பு-கின்றனர். சிதிலமடைந்த உடல்களை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மீண்டும் சீரமைத்து, புத்தாடை உடுத்தி அழகுபடுத்தி, முக்கியமான விழாக்களின் போது உணவும் படைக்கின்றனர். அவர்களின் வாழ்க்கைத் துணை இறக்கும்வரை இல்லங்களில் வைத்துப் பாதுகாக்கின்றனர். இறந்தவர்களின் உடல்களுடன் அவ்வப்போது குடும்பமாக உரையாடித் தங்கள் உறவைப் புதுப்பித்துக்கொள்கின்றனர். தங்கள் குடும்பத்தில் புதிதாகப் பிறந்தவர்களிடம் அறிமுகம் செய்து, குடும்பத்திற்காக அவர்கள் செய்த தியாகங்களையும் எடுத்துக்கூறி, புதிய தலைமுறையினரின் வாழ்வுக்குக் கலங்கரைத் தீபமாகச் சித்தரிக்கப்படுகின்றனர். இறந்தோரின் ஆவி, அவரது உடல் ஆடம்பரத்துடன் மறுவாழ்வுக்காகப் புதைக்கப்படும்வரை அவர்களை வழிநடத்துவதாகவும் நம்புகின்றனர். டிரோஜா பழங்குடி மக்களின் சிந்தனைப்படி இறப்பு இழப்புமல்ல: முடிவுமல்ல! நிறைவான. நிலைவாழ்வுக்கான வழியாகும்.

மரணத்தைப் பற்றி வெகுஜன மக்களின் பார்வை: மனித வாழ்வின் நிலையாமையை ஒரு பழமொழி இவ்வாறு படம் பிடித்துக் காட்டுகிறது: "கண் திறந்தால் பிறப்பு! கண் மூடினால் இறப்பு! கண்ணிமைப் பொழுதுதான் வாழ்வு!"

> **நீ இறப்பதற்குக் கற்றுக் கொண்டாயானால், வாழ்வது எப்படி என்று கற்றுக் கொள்வாய். பிறப்பைப்போல இறப்பும் ஒன்றின் தொடக்கமும் தொடர்ச்சியும் ஆகும். உதிர்ந்த சருகு வழிவிட்ட இடத்திலிருந்து புதிய தளிர் துளிர்ப்பது போல, மரணத்திற்குப் பிறகும் மண்ணகத்தில் நமது வாழ்வு தொடர்கின்றது.**

**க.சாம்சன்**

இரத்தினச் சுருக்கமாக, கருவறையிலிருந்து இறங்கி கல்லறை நோக்கிப் பயணிப்பதுதான் வாழ்க்கை. நம் வாழ்வு நிலையில்லாதது. நீர்க்குமிழி போன்றது. முடியப்போகும் பயணத்தைப் போன்றது. நிழலைப் போல மறைவது. நமக்கும் ஒருநாள் இல்லாத மறுநாள் வரும். ஒவ்வொரு சவ ஊர்வலமும் நமது இறுதி ஊர்வலத்தின் ஒத்திகை என்று எத்தனையோ வகைகளில் விளக்கினாலும், அதை ஏற்றுக்கொள்ள நமது மனது மறுக்கின்றது.

"மரணம் மற்றவர்களுக்குத்தானே ஒழிய, நானோ சாகா வரத்துடன் வந்திருக்கிறேன்" அல்லது "இப்போது எனக்கு எதுவும் நடக்காது" என்ற மனநிலையில்தான் நாம் வாழ்கின்றோம். வாழ்க்கை என்பதே ஒரு நீண்ட தூக்கத்தில் நாம் காண்கிற தொடர் கனவு. மரணம்தான் அதன் விளிம்பு என்கிறது ஜென் தத்துவம். அதனால் பயமெல்லாம் தேவையில்லை. பிறக்கும்போதே மரணம் நிச்சயம் என்பது எழுதப்படாத நியதியாகும். எனவேதான் "உறங்குவது போலும் சாக்காடு உறங்கிவிழிப்பது போலும் பிறப்பு" என்கிறார் திருவள்ளுவர். எப்போதோ பயின்றது வாழ்க்கை, மரணத்தைப் பார்த்துக் கேட்டதாம்: "என்னை மக்கள் ஏன் நேசிக்கிறார்கள்? உன்னை ஏன் வெறுக்கிறார்கள்? அதற்கு மரணம் சொன்னதாம்: "ஏனெனில், நீ ஓர் அழகான பொய் நான் ஒரு கசப்பான உண்மை." எவ்வித அச்சமுமின்றி ஆயிரக்கணக்கான அடி உயரத்தில் வானில் பறக்கும் மனிதன், ஆறடி ஆழ்குழியைக் கண்டதும் அஞ்சுகிறான். மனித வாழ்வு நிலையற்றது என்று தெரிந்திருந்தும் ஓய்வின்றி ஓடியோடி உழைத்துச் செல்வம் சேர்க்கின்றான். ஏக்கர் ஏக்கராக இடம் வாங்கப்போகிறேன் என்று எண்ணி மகிழ்ந்தவனைப் பார்த்துச் சுடுகாடு சிரித்துக்கொண்டு, "உன்னையே வாங்கப்போவது நான்தானே நண்பா!" என்றதாம். "ஆடி அடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே சொந்தமடா" என்பது நிதர்சனமான உண்மையாகும்.

ஒருவேளை மருத்துவத்தின் அபார வளர்ச்சியால் வாழ்க்கையைக் கொஞ்சக்காலம் நீடித்து இறப்பை ஒத்திப் போடலாமே ஒழிய, அதை நாம் தவிர்க்க முடியாது. இதற்காக மரணத்தைக் கண்டு நாம் அஞ்ச வேண்டியதில்லை. வாழ்பவர்களைவிட இம்மண்ணில் வாழ்ந்து இறந்தவர்கள்தாம் அதிகம். ஒருநாள்தான் தனது ஆயுள் என்பதால், ஈசல் சோகத்திலும் இருப்பதில்லை. நூறாண்டு காலம் என்பதால் ஆமை தலைக்கனத்துடன் திரிவதுமில்லை.

கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சாக்ரடீஸ், தான் விஷம் வைத்துக் கொல்லப்படுவதற்கு முன் தன்னைக் காப்பாற்ற வந்த நண்பன் கிரீட்டோவிடம், "மரணத்தைப் பற்றிக் கவலைப்படாதே நீ இருக்கும் வரை மரணம் வருவதில்லை. அது வரும்போது நீயே இருக்கப்போவதில்லை. பிறகு ஏன் கவலை? நான் இறந்துவிடப் போகிறேன் என்று எவரும் எனக்காகக் கவலைப்பட வேண்டாம். என் உடலை எரிப்பதா? புதைப்பதா? என்ற குழப்பமும் வேண்டாம். அது வெறும் உணர்வற்ற சடலம்தானே! அதை என்ன செய்தால் என்ன? " என்று சாக்ரடீஸ் கூறுகின்றார். ஓர் உலகப் புகழ்பெற்ற லெபனான் நாட்டு பன்முகத்திறமை வாய்ந்த எழுத்தாளர் கலீல் ஜிப்ரான், "வாழ்க்கையைச் சரியாக வாழத் தெரிந்தவர்கள் மரணத்தையும் சரியாகப் பார்க்கிறார்கள். பகலில் பார்க்கத் தெரியாத ஆந்தைக்கு ஒளியின் உன்னதம் எப்படிப் புரியுமோ, அப்படி வாழ்வையே சரியாக வாழாதவர்களுக்கு மரணத்தின் உன்னதம் எப்படிப் புரியும்?" என்கிறார்.

எதிர்மாறாக, மரணத்தைப் பற்றிச் சிந்திக்கும் போது மோரி என்னும் எழுத்தாளர் மரணத்தின் அர்த்தத்தையும் அவசியத்தையும் பின்வருமாறு எடுத்தியம்புகின்றார்: "நீ இறப்பதற்குக் கற்றுக் கொண்டாயானால், வாழ்வது எப்படி என்று கற்றுக் கொள்வாய். பிறப்பைப்போல இறப்பும் ஒன்றின் தொடக்கமும் தொடர்ச்சியும் ஆகும். உதிர்ந்த சருகு வழிவிட்ட இடத்திலிருந்து புதிய தளிர் துளிர்ப்பது போல, மரணத்திற்குப் பிறகும் மண்ணகத்தில் நமது வாழ்வு தொடர்கின்றது. இறப்பு என்னும் வாயிற்படி வழியாக, அது நிலைவாழ்வில் நிறைவு பெறுகிறது என் பதைப் பல்வேறு கோணங்களிலிருந்து பார்க்க முயலும்."

**மண்ணகத்தில் தொடர் வாழ்வுக்கான வித்துக்கள்**

1) ஒவ்வொருவரும் இறைவனின் படைப்புத் திட்டத்தில், உடன் படைப்பாளியாகச் செயற்பட்டுக் குழந்தையை உருவாக்குகின்றோம். அதற்கு இரத்தமும் சதையும், இருதயமும் - எலும்பும் கொண்ட உடலை மட்டும் கொடுப்பதில்லை. அக்குழந்தை பெற்றோரின் பண்புநலன்களையும் உள்வாங்கி, அவர்களின் நகலாக, வாரிசாகத் தோன்றுகின்றது. பெற்றோர்கள் தங்கள் மறைவிற்குப் பிறகும் தங்கள் பண்புகள், குணநலன்களுடன் தங்கள் வாழ்வைத் தங்கள் வாரிசுகள் வழியாகத் தொடர்கின்றனர். பிள்ளைகள் வழியாகவே ஒருவரது தகைமை வெளிப்படும் என்கின்றது சீராக்கின் ஞானம் (11:28).

2) ஒருவன் பெயரளவுக்குக் கிறிஸ்தவன் என்பதால், அவனுக்குப் பெயரும் புகழும் வாழ்வும் வந்துவிடப் போவதில்லை. நற்செய்தி விழுமியங்களின் அடிப்படையில் இயேசு கூறியது போன்று, அன்புக் கட்டளைக்குச் செயல் வடிவம் கொடுக்கும் போது (லூக் 10:27- 28) நாம் இறந்தும் வாழ்கிறோம். இதற்கு அன்னை தெரேசா சிறந்த எடுத்துக்காட்டாகும். அதே போன்று, அண்மையில் மறைந்த ரத்தன் டாட்டா, தான் பெற்ற செல்வத்தை ஏழைகள், அனாதைகளுக்கு விட்டுச்சென்றதால், இறந்தும் இறவாது அவர்களின் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

**திரு அவையின் கண்ணோட்டத்தில்**

ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 2-ஆம் நாள் நம்மை விட்டுப் பிரிந்து சென்ற நமது பாசமிகு சொந்தங்களை எண்ணி அவர்களுக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுத்து மனித பலவீனத்திலே அவர்கள் செய்த தவறுகளைக் களைந்து. நித்தியப் பேரின்பத்தில் இறைவனுடன் இணைந்து வாழவேண்டுகிறோம். "நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் பெருமூச்சுவிடுகிறோம்" (2கொரி 5:12) "நமக்கோ விண்ணகமே தாய்நாடு" (பிலி 3:12) "நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே, நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே. உயிர்நீத்துக் கிறிஸ்துவோடு இருக்க வேண்டும் என்பது என் ஆவல்" (பிலி 1:21-23).

ஒருவனின் பிறப்பைப் பற்றிக் கணிக்கத் தெரிந்த நமக்கு மரணம் எப்போது வரும் என்று தெரியாது. திருடனைப்போல இரவில் வரும் மானிட மகனைச் சந்திக்க நாம் ஆயத்தமாய் இருக்க வேண்டும் என்று திருவிவிலியத்தில் பல்வேறு இடங்களில் காண்கிறோம். மேலும், புனித யோவான் நற்செய்தியில், "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வர்" (யோவா 11:25) என்று இயேசு கூறுகிறார். தம் இறப்பின் வழியாக நமது சாவை அழித்து,

> பிறக்கும்போதே மரணம் நிச்சயம் என்பது எழுதப்படாத நியதியாகும். எனவேதான்
> **"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு"**
> என்கிறார் திருவள்ளுவர். எப்போதோ பயின்றது வாழ்க்கை, மரணத்தைப் பார்த்துக் கேட்டதாம்: "என்னை மக்கள் ஏன் நேசிக்கிறார்கள்? உன்னை ஏன் வெறுக்கிறார்கள்? அதற்கு மரணம் சொன்னதாம்: "ஏனெனில், நீ ஓர் அழகான பொய் நான் ஒரு கசப்பான உண்மை."

தம் உயிர்ப்பினால் வாழ்வு அளிப்பவர் (2திமொ 1:10) இயேசு என இறந்தோருக்கான மன்றாட்டில் செபிக்கிறோம்.

எவ்வாறு பாம்பின் விஷத்தைக் கொண்டு விஷத்தை அகற்றுகின்றோமோ, முள்ளை முள்ளால் எடுக்கின்றோமோ அதுபோல கிறிஸ்துவின் மரணம் நம் மரணத்தை அழித்து, நமக்கு நிலைவாழ்வு அளிக்கின்றது. நிலைவாழ்வு என்பது இறைவனை ஏற்று அவருடன் வாழும் அன்புறவாகும். எனவே, "உன்னைப் படைத்தவரை நீ மறவாதே. நீ முடிவற்ற ஓய்விற்குச் செல்லும் முன்னும், கடவுள் தந்த உயிர் அவரிடமே திரும்பும் முன்னும் உன்னைப் படைத்த வரை உள்ளத்தில் நினை" என்கிறார் சபை உரையாளர் (12:6-7). முடிவில்லாத தண்டனை என்பது இறைவனின் அன்பைப் புறக்கணித்து, அவருடன் கொண்டிருந்த உறவைத் துண்டித்துக் கொள்வதாகும். இரும்பை அதன் துருவைத் தவிர, வேறு யாரும் அழிக்க முடியாது. அதுபோல, உனது எண்ணம். சிந்தனை, செயலைத் தவிர யாரும் உன்னை அழிக்க முடியாது. வேறு வார்த்தைகளில் கூறினால், நரகம் என்பது இறைவன் இல்லாத இருளடைந்த உலகமே தவிர வேறில்லை. நிலைவாழ்வை நமதாக்கிக்கொள்வதும் புறக்கணிப்பதும் நம் கையில்தான் உள்ளது.

02-11-2025 நல்லவர்களின் முடிவாக, இம்மண்ணக வாழ்வும் விண்ணக வாழ்வும் இரட்டைக் குழந்தைகளாகும். "நீ பிறந்ததும் அழுதாய் மகனே! ஆனால், பிரபஞ்சம் மகிழ்ந்தது. உன் வாழ்க்கையை நினைத்து மற்றவர் அழ. நீ மகிழ்வோடு சாதல் வேண்டும்" என்கிறது ஒரு பழமொழி, ஒவ்வொருவருக்கும் இறைவன் பரிசாக வழங்கிய வாழ்வை அர்த்தமுள்ள வகையில் வாழ்ந்து, நிலைவாழ்வை நோக்கிப் பயணிப்போம்.

ஓர் அருமையான பழமைவாய்ந்த கதையுடன் இக்கட்டுரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்: ஒரு மகாராஜா ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடன் மங்கள இசையுடன் தனது ஈமச்சடங்குகளைத் தானே கொண்டாடுவார். கூடவே "நான் இந்த நாளை முழுமையாக வாழ்வேன்" என்று செபிப்பாராம். இளவரசன் தன் தந்தையிடம், "ஏனப்பா நீங்கள் இறக்கும் முன்னே ஒவ்வொரு நாளும் உங்கள் ஈமச்சடங்கை நீங்களே செய்கிறீர்கள்?" என்று கேட்டானாம். அதற்கு அவர், "மகனே, இந்த மகாராஜா செய்வது என்னவென்றால், தன் நிலையாமையை நித்திய வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்கிறார். இதனால் ஒவ்வொரு நாளும் இன்றே அவரது இறுதி நாள் என்பதுபோல வாழ்வார்" என்றாராம்.

# இறந்தோருக்கான திருப்பலியும் திருஅவையின் படிப்பினைகளும்



மெர்லின் ரஞ்சித் அம்புறோஸ்

## கிரகோரியன் திருப்பலி என்றால் என்ன?

இறந்தோருக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுக்கிற வழக்கம் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி, இறந்தோரின் ஆண்டு நினைவு நாள் திருப்பலி ஆகியவற்றோடு முடிவுறுவது இல்லை. மாறாக, இறந்தவர்களுக்காக நவநாள் திருப்பலி ஒப்புக் கொடுப்பது மற்றும் கிரகோரியன் திருப்பலி ஒப்புக்கொடுப்பது ஆகியவையும் இதில் அடங்கும். இதில் நவநாள் என்பது தொடர்ச்சியாக ஒன்பது நாட்கள் திருப்பலியை இறந்தவரின் ஆன்மாவிற்காக ஒப்புக் கொடுப்பதாகும்.

கிரகோரியன் திருப்பலி என்பது ஒருவர் இறந்தவுடன் தொடர்ந்து 30 திருப்பலிகளை ஒப்புக் கொடுத்து, கழுவாய் நிலையில் இருக்கிற ஓர் ஆன்மாவை விரைந்து விண்ணகம் சேர்த்திட இறைவனிடம் இறைஞ்சுகிற ஒரு பாரம்பரிய முறையாகும். கிரகோரியன் திருப்பலி என்ற இந்தப் பெயரானது கி.பி. 590 முதல் 604 வரை திருத்தந்தையாக இருந்த புனித பெரிய கிரகோரியாரின் நினைவாகவே கொடுக்கப்பட்டது. ஏனெனில், ஆன்மாக்களைக் கழுவாய்நிலையில் இருந்து மீட்பதற்காக நிறை வேற்றப்படும் இந்தக் கிரகோரியன் திருப்பலி என்ற இந்தப் பக்தி முயற்சி பரவ இவர் பெரும் தொண்டாற்றினார். இவர் உரோமை நகரில் உள்ள புனித ஆண்ட்ரூ இல்லத்தில் இறந்த துறவியான யுஸ்துஸ் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 30 நாள்கள் தொடர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தார். முப்பதாம் நாள் திருப்பலி முடிவில் இறந்த யுஸ்துஸ் தனது சக துறவிக்குத் தோன்றி, தான் கழுவாய்நிலையின் அணையா நெருப்பிலிருந்து மீட்கப்பட்டதை அறிவித்தார் என்பதைப் புனித பெரிய கிரகோரியார் தனது “உரையாடல்கள்“ (Dialogues) எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

### இறந்தோருக்கான திருப்பலி மற்றும் காணிக்கைகள் குறித்து திரு அவைச்சட்டப் பார்வை

திரு அவைச் சட்ட எண். 945 கிறித்தவ நம்பிக்கையாளர்களின் கருத்துக்களுக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுக்க அதிலும் குறிப்பாக, காணிக்கை எதுவும் பெறாமல் வறியவர்களுக்காகத் திருப்பலி ஒப்புக் கொடுக்க மிகவும் அறிவுறுத்துகிறது. இந்த ஆண்டு திருப்பலி குறித்து அருட்பணியாளர்களுக்கான வத்திக்கான் நகரத்திலிருக்கும் திருப்பீடப் பேராயம் வெளியிட்ட “Secundum Aroatum“ என்ற ஆவணம் ஏழைகளுக்காக அவர்களுடைய கருத்துக்களுக்காக அவர்களிடம் எந்தவித திருப்பலிக்கான கட்டணமும் பெறாமல் அருட்பணியாளர்கள் திருப்பலி ஒப்புக்கொடுப்பதன் தேவையையும் அடிக்கோடிட்டுக்காட்டியுள்ளது. இது ஏழைகள், அவர்கள் குடும்பத்திலிருந்து இறந்துபோன அவர்களுடைய உறவினர்களுக்காக அருட்பணியாளர்கள் திருப்பலி ஒப்புக்கொடுப்பதன் தேவையை உணர்த்துகிறது.

திரு அவைச் சட்ட எண். 948, “தனிப்பட்ட காணிக்கைகள் சிறியதாக இருந்தாலும், எத்தனை கருத்துக்களுக்காக அளிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டதோ அத்தனை கருத்துகளுக்காகத் தனிப்பட்ட திருப்பலிகள் ஒப்புக்கொடுக்க வேண்டும்“ எனவும் விளக்குகின்றது. இது ஒரு மேல்வரிச்சட்டம் என்றாலும், திருப்பலியின் விலைமதிப்பற்ற தன்மையினாலும் குறைந்து வரும் அருட்பணியாளர்களின் எண்ணிக்கைக்கு மத்தியில் பெருகிவரும் மக்களது ஆன்மிகத் தேவைகளைக் கருத்தில் கொண்டு திரு ஆட்சிப்பீடமானது 1991-ஆம் ஆண்டு ஓர் ஆணையை வெளியிட்டது. Mos iugiter (ffS 83 (1991) 436-446) என்று அழைக்கப்பட்ட திரு ஆட்சிப்பீடத்தின் அந்த ஆணை திரு அவைச்சட்ட எண் 948 வரையறுத்த கடுமையான சட்டத்தைத் திருத்தியமைத்து பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் திருப்பலியில் திரள்தொகுப்பு கருத்துகளுக்கு அனுமதி வழங்கியது:

1.கூட்டுத்திருப்பலி கருத்துகள் (pluri- intentioral mass of collective mass Intentiobs) கொண்டாடப்படுவதற்கு முன்பு நன்கொடையாளர்களுக்கு அவர்களின் திருப்பலிக்கான கருத்து கள் ஒரே திருப்பலியில் இணைக்கப்படுவது குறித்து தெரிவிக்கப்பட்டு அவர்களது ஒப்புதலை பெறல் வேண்டும்.

2. இத்தகைய திருப்பலிகள் நடைபெறும் நேரம், இடம் கண்டிப்பாக இத்தகைய திருப்பலியை ஒப்புக்கொடுக்க விரும்புகிறவர்களுக்கு அறிவிக்கப்படல் வேண்டும். அதேபோல இத்தகைய கூட்டுக் கருத்துத் திருப்பலிகளின் எண்ணிக்கை வாரத்திற்கு இரண்டுக்குக் கூடாமல் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

3. திருப்பலியை நிறைவேற்றுபவர் ஒரு திருப்பலிக்கு உரிய காணிக்கையைத் தனக்கென எடுத்துக் கொண்டு மீதமிருக்கிற கருத்துகளை ஆயர் வரையறுத்துள்ள நோக்கத்திற்காக அனுப்புதல் வேண்டும் என்றெல்லாம் வரையறுத்துள்ளது.

இறந்த ஆன்மாக்களுக்கான புகழ்பெற்ற செபம்

புனித ஜெர்த்ரூத் அவர்களின் செபம்தான் இறந்தவர்களுக்காகக் கூறப்படும் செபங்களில் மிகவும் பிரபலமான செபம். புனித ஜெர்த்ரூத் அம்மா 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பெனடிக்டைன் சபையைச் சேர்ந்த துறவி மற்றும் இறை நல்லவர்களி உணர்வாளர். இந்த இறைவேண்டலை பக்தியோடு இறைவேண்டல் செய்கிற ஒவ்வொரு முறையும் 1000 ஆன்மாக்கள் கழுவாய் நிலையிலிருந்து விடுவிக்கப்படும் என்று இயேசு கிறிஸ்துவே இவருக்கு வாக்குறுதி தந்ததாகக் கூறப்படுகின்றது.

அந்த இறைவேண்டல் பின்வருமாறு: “என்றென்றும் வாழும் கடவுளே! எங்கள் ஆண்டவரும் உமது அன்பு மகனுமாகிய இயேசு கிறிஸ்துவின் விலைமதிப்பில்லா திருஇரத்தத்தை, இந்த நேரத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் எல்லா திருப்பலிகளோடும் சேர்த்து கழுவாய் நிலையில் உள்ள எல்லா ஆன்மாக்களுக்காகவும், உலகெங்கும் உள்ள பாவிகளுக்காகவும், திரு அவையில் உள்ள பாவிகளுக்காகவும், எந்தன் இல்லத்திலும் குடும்பத்திலுள்ள பாவிகளுக்காகவும் ஒப்புக் கொடுக்கிறேன். ஆமென்.“

குடும்ப உறுப்பினர்களோடு இணைந்து ஒரு பத்து மணி செபமாலையாக புனித ஜெர்த்ரூத் அம்மாளின் இந்த அற்புதமான செபத்தை இறைவேண்டல் செய்வது ஓர் அலாதியான அனுபவத்தையும் ஆறுதலையும் நமக்குப் பெற்றுத்தரும். இறந்து கழுவாய்நிலையில் இருக்கிற நம் நேசத்துக்குரியவர்களால் எந்த ஒரு பிறரன்புச் செயலும் செய்ய முடியாது. எனவே, அவர்களின் மீட்புக்காக உயிரோடு இருக்கிற நாம் பிறரன்புச் செயல்களை செய்யலாம். நமது செயல்கள் அவர்களின் பாவங்களுக்குப் பரிகாரமாக அமையும். இவர்களுக்காக இறைவேண்டல் செய்வது மிகச் சரியான வழி. கிறிஸ்துவின் தியாகத்தை உள்ளடக்கிய திருப்பலியே ஆகும்.

ஓர் அருள்பணியாளர் திருப்பலியை ஒரு குறிப்பிட்ட கருத்துக்காக ஒப்புக்கொடுக்கிறபோது. அது நாம் அந்த நபர்மீது கொண்டிருக்கிற அன்பில் வேரூன்றி, கடவுளிடம் அளிக்கப்பட்ட கிறஸ்துவின் நிறைவான இறைவேண்டலாக மாற்றம் பெறுகின்றது. இறைவேண்டல், ஒறுத்தல் முயற்சிகள், தானம் செய்தல் போன்ற பல காரியங்களில் நாம் ஈடுபடலாம் என்றாலும், கிறிஸ்துவின் தியாகப் பலிக்கு ஈடாக பலன்தரக்கூடிய ஒன்று இருக்க முடியாது. நம் நேசத்துக்குரியவர்கள் இறந்து போகிற போது அவர்களுக்காக ஒப்புக்கொடுக்கிற திருப்பலியையும் இறைவேண்டலையும் விட ஆறுதலையும் அமைதியையும் எந்த ஓர் அனுதாப அட்டையோ அல்லது சூட்டப்படும் மலர்களோ கொடுத்துவிட முடியாது. எனவே, திருப்பலி மற்றும் இறைவேண்டல்களை ஒப்புக்கொடுப்பதன் வழியாக அவர்கள் நிறை வாழ்வைப் பெற நாம் அவர்களுக்கு உதவி செய்வோம்.

---

# மறைப்பணி புரிந்த மாமேதை நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்



பன்மொழிப் பண்டிதர்

அச்சுவேலி திண்ணைப் பள்ளியிலே சுவாமி ஞானப்பிரகாசர் தமது தாய்மொழியாம் தமிழ் மொழியை ஆர்வத்தோடு கற்கத் தொடங்கினார். ஆங்கிலக் கல்வியைப் பெறுவதற்காக மானிப்பாய் “மெமோறியல்” கல்லூாயில் சேர்க்கப்பட்டார்.தாய் மொழியோடு, உலக மொழியாம் ஆங்கில மொழியை ஓரளவு அறிந்து கொண்டு, மொழிகளின் அறிமுகம் பெறுவதற்கு அவருக்கு புனித பத்திரிசியார் கல்லூரி அடித்தளமாய் அமைந்தது.

கல்லூரிப் படிப்பை முடித்த கையோடு, பெருந்தோட்டப் பகுதியிலும், இலங்கைப் புகையிரத தலைமையகத்திலும் தொழில் புரியக் கிடைத்த சந்தர்ப்பம் ஆங்கிலத்திலே பாண்டித்தியத்தை ஏற்படுத்தி அயல் மொழியாம் சிங்களத்தையும் தெரிய வைத்தது. இவற்றோடுகிரேக்கம், இலத்தீன் போன்ற மொழிகளின் அடிப்படைகளை அறியக் குருமடம் நாற்று மேடையாய் அமைந்தது.குருத்துவப் பணி வாழ்வுக்கான பயிற்சிக் காலத்திலேயே நூல்களைச் சேர்ப்பதும், வாசிப்பதும், எழுதுவதும் சுவாமி அவர்களின் நாளந்தக் கடமையாய் மாறியது. ஆயரின் அனுமதியோடு “அமலோற்பவ இராக்கினி தூதன்“ என்ற இதழை ஆரம்பித்து விசுவாச உண்மைகளைக் கத்தோலிக்க மணம் வீசி மலர வைத்தார்.

சீரிய சிந்தனைகளை எழுத்திலே அமைத்துவிடும் திறன் மட்டுமல்லாது அதனை வார்த்தையிலே வடிக்கின்ற வல்லமையை அவர் நன்கு பெற்றிருந்தார்.

திருத்தந்தை லியோ அவர்கள் 1901ஆம் ஆண்டை யூபிலி ஆண்டாகப் பிரகடனம் செய்திருந்தார். அந்த ஆண்டிலேயே தர்க்கப் பிரசங்கங்களை குடாநாட்டின் பல பகுதிகளில் தொடங்கினார். பல மொழிகளில் பாண்டித்தியத்தையும் “மொழிகளின் உற்பத்தி பற்றிய புதிய கோட்பாட்டை“ யும் எப்படிப் பெற்றுக்கொண்டார் எனச் சுவாமி அவர்களே தமது “தமிழ் வளர்ந்த வரலாறு“ எனும் நூலில் கீழ்க் கண்டவாறு சொல்லுகின்றார்.

"சேவை சம்பந்தப்பட்ட முயற்சி நிறைந்த வேலைகளை முடித்த காலம் ஒன்றில் எத்தகைய காத்திரமான பணிகளிலும் ஈடுபட முடியாத நிலையில் ஒருநாள் களைத்திருந்தேன். திரு. சி. டபிள்யூ கதிரவேற்பிள்ளை அவர்களின் புதிய தமிழ் அகராதியைக் கண்டேன். இப்பெரிய மேதை தனது வாழ்க்கைச் சாதனையான இந்நூலில் ஒருசில தெளிவற்ற செந்தமிழ்ச் சொற்கள் பற்றி என்ன வரைந்திருக்கிறார் என்பதை அறிய விரும்பி அதன் பக்கங்களைப் புரட்டினேன். விரைவில் ஒரு முக்கியமான உண்மையை நோக்கி என் கவனம் இழுக்கப்பட்டது. இதற்கு முன்னர் ஒரு பொழுதும் இது என்னை அவ்வளவாகக் கவர்ந்ததில்லை. அதாவது சிறப்பாக அமைந்த ஒத்த தன்மைத்தான மொழியின் சொற்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள சொற் கூட்டத்துள் இடம்பெறுகின்றன. கால்ட் வெல்லும், ஏனையோரும் ஒரு சில சொற்கள் சம்பந்தமான உண்மையைக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், இத்தொடர்பு எல்லாச் சொற்களையும் அடக்கும் என்பதை இப்பொழுதுதான் நான் காணத் தொடங்கியுள்ளேன்“. இவ்வாறு தமது அறிவுச் செல்வத்தையும், ஆக்கும் திறமையையும் ஆய்வு முறைமைகளையும் கொண்டு மொழி ஆராய்ச்சியில் குதிக்கின்றார்.

(தொடரும்....)

**அன்பின் மகிழ்வு**

# ஏழைகளைக் கவனிக்க மறக்கும் திருஅவை கிறிஸ்துவையே மறந்துவிடுகிறது

*புதிய திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் முதல் அப்போஸ்தல ஊக்கவுரை "நான் உன்னை அன்பு செய்து வருகின்றேன் (Dilexi Te)"*

37

## 1. முன்னுரை

"அன்பு என்பது வார்த்தைகளால் அல்ல, செயலில் வெளிப்பட வேண்டும்," என்று அன்னை திரேசாள் மொழிந்தார், வாழ்ந்தார். இயேசுவை உலகின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் கொண்டு-சென்று திருஅவையின் இருப்பைத் தன் எளிய வாழ்வின் மூலம் அறிக்கையிட்டார். இதையே நம் புதிய திருத்தந்தை "நான் உன்னை அன்பு செய்து வருகின்றேன் (Dilexi Te)" என்ற தனது முதல் அப்போஸ்தல ஊக்கவுரை ஆவணத்தின் மூலம் சுட்டிக்காட்டுகின்றார். புதிய திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், மறைந்த திருத்தந்தை பிரான்சிஸின் Dilexit Nos என்ற ஆவணத்தின் வழியைத் தொடர்ந்து, திருஅவைக்கு ஒரு தெளிவாகவும் அவசரமானதுமான அழைப்பை விடுக்கிறார்: திருஅவையானது கிறிஸ்துவின் இதயத்தில் பொங்கி வழியும் அன்பை மீண்டும் கண்டறிந்து, அந்த அன்பை ஏழைகள், துன்புறுவோர், புறக்கணிக்கப்பட்டோர் ஆகியோருக்கான சேவையில் வெளிப்படுத்த வேண்டும் என்பதே அந்த அழைப்பின் மையம். அதாவது அன்பு என்பது ஒரு உணர்ச்சி அல்ல, அது ஒரு பணியாகும். "இறுதிவரை அன்பு செய்த" கிறிஸ்துவின் இதயத்தைப் போல, கிறிஸ்தவ வாழ்க்கையும் கருணை, தியாகம், மற்றும் சேவையில் வேரூன்றியதாக இருக்க வேண்டும். இது நம்மை வார்த்தைகளிலிருந்து செயல்களுக்குக் கொண்டு செல்கிறது. வெறும் தானம் அளிப்பதைத் தாண்டி, ஏழைகளுடன் உண்மையான ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை நோக்கி எங்களை நகர்த்தவேண்டும்.

அதேசமயம், இது தனிநபர் மனமாற்றத்திற்கும், சமூக அமைப்புகளின் மாற்றத்திற்கும் அழைப்பு விடுக்கின்றது. கிறிஸ்துவின் இரக்கம், நம் செயல்களில், நிறுவனங்களில் மற்றும் சமூக உறவுகளில் பிரதிபலிக்க வேண்டும் என இவ் ஆவணம் வலியுறுத்துகிறது. ஏழைகளின் அழுகைக்கும், காயப்பட்ட மனிதகுலத்துக்கும், துன்புறும் படைப்பிற்கும் நாம் இப்போதே பதிலளிக்க வேண்டும் என்று அழைக்கிறது.

மொத்தத்தில், Dilexi Te என்பது ஒரு ஆழமான அழைப்பை நமக்குத் தருகிறது. அன்பைத் தனிப்பட்டதும், சமூகத்துடனும் இணைந்த வாழ்வாக ஆக்கி, ஒவ்வொரு மனிதரிலும் கிறிஸ்துவைக் காணவும், இரக்கத்தின் மூலம் பிளவுகளை நீக்கிக் கடவுளின் மென்மையான, மாற்றம் உண்டாக்கும் அன்பின் உயிருள்ள சின்னங்களாக மாறவும் நம்மை ஊக்குவிக்கிறது.

## 2 இவ் ஆவணத்தின் திருவிவிலிய அடித்தளம்

திருவெளிப்பாடு 3:9-இல் இருந்து இந்த ஆவணத்தின் தலைப்புப் பெறப்பட்டது. அந்த வசனத்தில் இறைவன் பிலதெல்பியா திருச்சபையிடம் இவ்வாறு கூறுகிறார்: "சிறிதளவு வலிமைதான் உன்னிடம் இருக்கிறது. இருப்பினும், நீ என் வாக்கைக் கடைப்பிடித்தாய் என் பெயரை மறுதலிக்கவில்லை. சாத்தானின் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள், தாங்கள் யூதர்கள் எனக் கூறிக் கொள்கிறார்கள்... அவர்கள் உன்னிடம் வந்து, உன் காலடியில் விழுந்து பணியச் செய்வேன். நான் உன்மீது அன்பு செலுத்தி வருகிறேன் என்பதையும் அறியச் செய்வேன்." (திருவெளிப்பாடு 3:9)

"நான் உன்மீது அன்பு செலுத்திவருகிறேன்" என்ற இந்த வார்த்தைகள், கிறிஸ்தவ நம்பிக்கையின் இதயத்தைக் காட்டுகின்றன. மனித பலவீனங்களும் குறைப்பாடுகளுக்கு மத்தியில் கூட நிலைத்திருக்கும் இறைவனின் நிபந்தனையற்ற அன்பை வெளிப்படுத்துகின்றன. இந்தத் தலைப்பைத் தேர்ந்தெடுத்ததன் மூலம், திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் தமது முதல் அப்போஸ்தலிக்க ஊக்கவுரையின் மையத்தைக் கிறிஸ்துவின் அன்பில் வேரூன்றச் செய்கிறார். இது திருத்தந்தை பிரான்சிஸின் "Dilexit Nos" எனும் ஆவணத்தின் தொடர்ச்சியான சிந்தனையாக வெளிவருகிறது. அதில் அவர், "இறைவனுக்கான அன்பும் ஏழைகளுக்கான அன்பும் பிரிக்க முடியாதவை" என்று வலியுறுத்தினார்.

"நான் உன்னை அன்பு செய்து வருகின்றேன்" என்ற வார்த்தைகள், இறைவன் நம்மீது கொண்டுள்ள அன்பின் ஆழத்தையும், அதிலிருந்து எழும் நம் அழைப்பையும் வெளிப்படுத்துகின்றன. திருஅவை தான் பெற்ற இந்த அன்பைக் கருணை, ஒற்றுமை மற்றும் நீதியின் செயல்களாக உலகில் வெளிப்படுத்த வேண்டும் என்பதே இந்த ஆவணத்தின் அழைப்பு. எனவே "நான் உன்னை அன்பு செய்து வருகின்றேன் (Dilexi Te)" என்பது ஒரு தலைப்பு மட்டுமல்ல அது ஆன்மீக ஆழம் கொண்ட இறை அழைப்பு: அன்பிலேயே உண்மையான கிறிஸ்தவ சீடத்துவம் ஆரம்பித்து முடிவடைகிறது என்பதை நினைவூட்டும் ஓர் சாட்சியம் ஆகும்.

## 3. Dilexit Nos இலிருந்து வரும் ஒரு தொடர் அழைப்பு

இந்த அப்போஸ்தல ஊக்கவுரை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது "Dilexit Nos" ("அவர் எங்களை அன்பு செய்கிறார்") என்ற சுற்றறிக்கையில் தொடங்கிய தெய்வீக மற்றும் மேய்ப்புச் சிந்தனையின் தொடர்ச்சியாகும். அந்த சுற்றறிக்கையில், இயேசுவின் இதயம் மனித மற்றும் தெய்வீக அன்பின் உயிருள்ள மூலமாக இருப்பதைப் பற்றி அவர் ஆழ்ந்த தியானத்தை வழங்கினார். துன்புறுவோருடனும் ஏழைகளுடனும் ஒன்றிணைந்து துடிக்கும் அந்த இதயத்தில் இரக்கம், கருணை, சமாதானம் ஆகியவை நிறைந்திருப்பதை திருஅவைக்குக் காட்டும் பணியை அவர் மேற்கொண்டார்.

அந்த அடிப்படையின் தொடர்ச்சியாக வருகின்ற இந்தப் புதிய அப்போஸ்தல ஊக்கவுரை அந்தத் தியானத்தைக் கிறிஸ்தவக் கடமையாக மாற்றுகிறது. இயேசுவின் இதய அன்பு நம்பிக்கையாளர்களின் செயல்கள், உறவுகள், மற்றும் சமூகப் பொறுப்புகளை வடிவமைக்கச் செய்யும் சக்தியாக விளங்க வேண்டும் என்று அது அழைக்கிறது. கிறிஸ்துவின் இதயத்தில் வெளிப்படும் தெய்வீக அன்பு தொலைதூரமான கனவு அல்ல. அது உயிரோடும் சக்தியோடும் செயற்படும் ஒரு மாற்றம் உண்டாக்கும் சக்தியாகும்.



இந்த அன்புத் திருஅவையை காயங்களை ஆற்றவும், பிளவுகளை இணைக்கவும், நீதி மற்றும் அமைதி நிலவும் சமூகங்களை உருவாக்கவும் தூண்டுகிறது. இவ்வாறு, இந்த ஆவணம் ஜெபத்தையும் செயல் வாழ்க்கையையும் இணைக்கிறது. புனித இதயத்திற்கான உண்மையான பக்தி, மற்றவர்களுக்கான அன்பாகவும், குறிப்பாகத் துன்புறுவோருக்கான அன்பாகவும் வழிந்தோட வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது. இந்தப் புதிய அப்போஸ்தல ஊக்கவுரை, திருத்தந்தை பிரான்சிஸின் பாரம்பரியத்தைத் தொடரும் வகையில், "கிறிஸ்துவின் இதயத்தோடு நடக்கும் திருஅவை" எனும் அழைப்பை மீண்டும் உயிர்ப்பிக்கிறது. அந்த இதயம், ஏழைகளுக்காகத் துடிக்கும் இதயம், காயப்படுத்தப்பட்டவர்களை ஆற்றும் இதயம், நம்பிக்கை இழந்தவர்களுக்கு ஒளிதரும் இதயம் ஆகும். திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் இந்த ஆவணத்தின் மூலம் திருஅவைக்கு மிகப்பெரும் உண்மையை நினைவூட்டுகிறார்: கிறிஸ்துவின் இதயத்திலிருந்து தொடங்காத எந்தச் சீர்திருத்தமும், எந்தப் பணி அழைப்பும், எந்தச் சேவையும் உயிரற்றதாகிவிடும். எனவே, "நான் உன்னை அன்பு செய்து வருகின்றேன் (Dilexi Te)" என்பது கிறிஸ்துவின் இதயத்தில் இருந்து ஒலிக்கும் அழைப்பு. அது திருஅவை மீண்டும் அந்த இதயத்தோடு துடிக்க வேண்டுமெனும் அழைப்பு.

## 4 புனித பிரான்சிஸ் அசிசியின் பெருவிழாவில் பிறந்த ஒரு ஆவணம்

இந்த அப்போஸ்தல ஊக்கவுரை 2025 அக்டோபர் 4ஆம் திகதி, புனித பிரான்சிஸ் அசிசியின் திருநாளில் கையெழுத்திடப்பட்டது, மேலும் 2025 ஒக்டோபர் 9ஆம் திகதி மக்களுக்காக வெளியிடப்பட்டது. இது ஒரு குறியீட்டுச் செயல் ஆகும், ஏனெனில் புனித பிரான்சிஸ் அசிசியார் தன் வாழ்வில் எளிமை, ஏழ்மை, படைப்பின் மீதான அன்பு, மற்றும் அனைத்து மனிதர்களுடனும் சகோதரத்துவம் ஆகியவற்றை ஆழமாக வாழ்ந்தவர். அவரது வாழ்க்கை நற்செய்தியின் ஆன்மாவை முழுமை யாகப் பிரதிபலித்தது, உலகை மாற்றுவது அதிகாரம் அல்லது செல்வத்தின் மூலம் அல்ல, தாழ்மையான அன்பின் வழியே என்பதைக் காட்டி நிற்கிறது.

எனவே, புனித பிரான்சிஸ் அசிசியின் பெருவிழாவில் இந்த ஆவணம் கையெழுத்திடப்பட்டிருப்பது, அதன் உள்ளார்ந்த செய்தியையும் நோக்கத்தையும் ஆழமாக வெளிப்படுத்துகிறது. இது கிறிஸ்துவின் இதய அன்பை ஏழ்மையிலும் எளிமையிலும் வெளிப்படுத்தி, திருஅவையை அன்பும் சேவையும் நிறைந்த பாதைக்கு அழைக்கும் ஓர் அடையாளமாகும் என்பதை வலியுறுத்துகிறது.

இன்றைய உலகில், நம் திருஅவைக்கு புனித பிரான்சில் அசிசியின் ஆன்மாவும் அவரது ஆன்மீகமும் இன்னும் அவசரமாகத் தேவையாகிறது என்பதை இவ் ஆவணம் கட்டியம்கூறி நிற்கின்றது. படைப்பைக் காக்கவும், ஏழைகளின் குரலைக் கேட்கவும், அன்பும் சமாதானமும் நிறைந்த உலகைக் கட்டியமைக்கவும். "நான் உன்னை அன்பு செய்து வருகின்றேன் (Dilexi Te)" என்ற ஆவணம், அந்த பிரான்சிஸ் அசிசியின் வழியிலே திருஅவையை மீண்டும் வழிநடத்தும் ஒரு தெய்வீக அழைப்பாகத் திகழ்கிறது.

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

## 5 இவ் அப்போஸ்தல ஊக்கவுரையின் வடிவமைப்பும் உள்ளடக்கமும்

இந்த அப்போஸ்தல ஊக்கவுரையில் ஒரு அறிமுகமும் ஐந்து அதிகாரங்களும் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்தின் முக்கிய கருத்துகள் பின்வருமாறு:

***அதிகாரம் 1:*** "சில அத்தியாவசிய வார்த்தைகள்" " ஏழ்மை என்றால் என்ன என்பதை விளக்குகிறது. செல்வமும் சமூக அமைப்புகளும் எவ்வாறு சிலரைப் புறக்கணிக்கின்றன என்பதை விளக்கி சிறிய அன்புச் செயல்களின் மதிப்பையும் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி நிற்கின்கிறது. புனித பிரான்சிஸ் அசிசியின் வாழ்க்கையை இதற்கு ஓர் முன்னுதாரணமாக முன்வைக்கிறது.

***அதிகாரம் 2:*** "ஏழைகளைத் தேர்ந்தெடுக்கும் கடவுள்"- கடவுளின் அன்பு ஏழைகளின் மீதான பரிவிலும் பராமரிப்பிலும் வெளிப்படுகிறது என்பதை விவிலிய ஆதாரங்களுடன் எடுத்துரைக்கின்றது. இயேசுவின் ஏழ்மையான வாழ்க்கையில் அந்த அன்பு எவ்வாறு வெளிப்பட்டது என்பதையும் இந்த அதிகாரம் சிறப்பாக வெளிப்படுத்துகிறது.

***அதிகாரம் 3:*** "ஏழைகளுக்கான திருஅவை" - கிறிஸ்தவ பாரம்பரியம் எவ்வாறு ஏழைகளுக்குச் சேவை செய்தது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. திருஅவை ஏழைகளுடன் ஏழையாக இருப்பதை ஊக்குவிக்கிறது. குறிப்பாக அவர்களிடமிருந்து பிரிந்து நிற்காமல், அவர்களுடன் ஒற்றுமையில் வாழ அழைக்கிறது.

***அதிகாரம் 4:*** "தொடரும் ஒரு வரலாறு" - முந்தைய திருத்தந்தையர்கள் மற்றும் கத்தோலிக்க சமூகப் போதனையின் தொடர்ச்சியில் இந்த ஆவணம் எவ்வாறு ஒரு பகுதியாக அமைந்துள்ளது என்பதைக் காட்டுகிறது.

**அதிகாரம் 5:** "நிரந்தரமான சவால்" - கிறிஸ்தவர்கள் அனைவரும் ஏழைகளைக் கவனிப்பதை, கிறிஸ்தவ அடையாளத்தின் மற்றும் புனிதத்துவத்தின் இயல்பான வெளிப்பாடாகக் காண வேண்டும் என அழைக்கிறது.

இந்த ஐந்து அதிகாரங்களும் சேர்ந்து, "நான் உன்னை அன்பு செய்து வருகின்றேன் (Dilexi Te)" என்ற அப்போஸ்தல ஊக்கவுரையின் இதயத்தை வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு பகுதியும் கிறிஸ்துவின் இதய அன்பை வேறு வேறு கோணங்களில் வெளிப்படுத்துகிறது. கருணையால் தொடங்கும் தியானம், ஏழைகளுடன் இணையும் அன்பு, சமூக மாற்றத்திற்கான அழைப்பு, மற்றும் புனிதத்துவம் நோக்கி வழிநடத்தும் நம்பிக்கை என்பன இந்த ஆவணத்தின் முக்கிய கருப்பொருட்களாகும். இவ் ஆவணம் முழுவதும், அன்பு என்பது கிறிஸ்தவ நம்பிக்கையின் மையம் மாத்திரம் அல்ல, அதன் செயலில் வெளிப்படும் சக்தியும் என்பதை திருஅவைக்கும் உலகுக்கும் மீண்டும் நினைவூட்டுகிறது.

*(தொடர்ச்சி ..... பக்)*

## ஏழைகளைக் .......

(6ம் பக்கத் தொடர்ச்சி....)

### 6 இந்த அப்போஸ்தல ஊக்கவுரையின் விளைவுகளும் செயல் அழைப்பும்

இந்த ஆவணம் கிறிஸ்தவர்கள் மற்றும் திருஅவையின் நிறுவனங்களை வெறும் தானம் அளிக்கும் பணியைக் கடந்த ஒரு ஆழமான மாற்றத்திற்காக அழைக்கிறது. தானம் அளிப்பது அவசியமானது, ஆனால் அது முதல் படி மட்டுமே. உண்மையான சவால், அநீதி மற்றும் ஏழ்மையை நிலைத்திருக்கச் செய்கின்ற மனப்பாங்குகளையும் அமைப்புகளையும் மாற்றுவதில்தான் இருக்கிறது. எனவே, திருஅவையின் பணி பசித்தவர்களுக்கு உணவு கொடுப்பதோ, நிர்வாணருக்கு ஆடை அளிப்பதோ மட்டுமல்ல. அதற்கு மேலாக அவர்கள் ஏன் பசித்திருக்கின்றனர்? ஏன் வறுமையில் வாழ்கிறார்கள்? என்பதையும் கேட்டு, அந்த நிலைகளை மாற்றும் முயற்சிகளை மேற்கொள்வதில் தங்கியுள்ளது.

இந்த அழைப்பு தனிநபர்களுக்கும் சமுதாயத்திற்கும் பொருந்துகிறது. ஒவ்வொரு விசுவாசியும் தமது வாழ்க்கைமுறை, முடிவுகள், மற்றும் உறவுகள் சமூக அநீதியை நிலைநிறுத்துகின்றனவா அல்லது அதனை சவாலிடுகின்றனவா என்பதை சிந்திக்க அழைக்கப்படுகின்றார்கள். அதே போல், திருஅவை நிறுவனங்களும் தங்களது சொந்த நடைமுறைகளை ஆய்வு செய்ய அழைக்கப்படுகின்றன: அவர்கள் வளங்களை எவ்வாறு நிர்வகிக்கிறார்கள், பணியாளர்களை எவ்வாறு நடத்துகிறார்கள், மாணவர்களுக்கு எவ்வாறு கல்வி கற்பிக்கிறார்கள், மற்றும் சமூகத்துடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள் என்பதையும் ஆராய அழைக்கிறது. மேய்ப்புப் பணிப் பார்வையில், இது இரக்கத்திலிருந்து நீதிக்கான அழைப்பு, தற்காலிக நிவாரணத்திலிருந்து நிலையான மாற்றத்திற்கான அழைப்பு ஆகும். இது இரக்கத்திலிருந்து நீதிக்கான அழைப்பாகவும் தற்காலிக நிவாரணத்திலிருந்து நிலையான மாற்றத்திற்கான அழைப்பும் ஆகும். இதுகல்வி நிறுவனங்களையும் சேவை மையங்களையும் கருணை மற்றும் சமூகப் புதுப்பிப்பின் மையங்களாக மாற்ற சவால்விடுகிறது. எனவே திருஅவையானது கிறிஸ்துவின் அன்பால் உந்தப்பட்ட திருஅவையாக, ஏழைகளுக்குச் சேவை செய்யும் சமூகமாக மட்டுமல்ல, அவர்களை அவர்களது எதிர்காலத்திற்காக உழைக்கவும் அழைக்கிறது. இவ்வாறு, ஏழைகளுக்கான அக்கறை என்பது வெறும் சமூகக் கடமை மட்டுமல்ல அது கிறிஸ்துவைப் பின்பற்றும் சீடர்களுக்கான ஓர் ஆழ்ந்த அழைப்பாகும். ஏழைகளின் முகத்தில் கிறிஸ்துவின் முகத்தைக் காணும் நம் பிக்கை உள்ள திருஅவையை தான் உயிரோட்டமுள்ள திருஅவையாக இருக்கிறது. எனவே அன்பும் நீதியும் இணையும் போது, உலகம் புதிதாக உருவாகும். திருஅவை அந்த மாற்றத்தின் கருவியாக இருக்க அழைக்கப்படுகிறது.

### 7 "சந்திப்பு ஒரு தெய்வீக அனுபவம் ஏழைகளில் கிறிஸ்துவை காணுதல்"

ஏழைகளில் கிறிஸ்துவைச் சந்தித்தல் என்பது அன்பின் உறவுக்கான அழைப்பாகும். இந்தப் போதனை, விசுவாசிகளை வெறும் தானம் அல்லது உதவி என்ற தொலைதூர மனப்பான்மையிலிருந்து மீள அழைக்கிறது. ஏழைகள் உதவி பெற வேண்டியவர்கள் மட்டுமல்லர் அவர்கள் கிறிஸ்துவின் உயிருள்ள உருவங்கள் ஆவர். அவர்களில் சகோதரர்களையும் சகோதரிகளையும் காண்பது என்பது மாண்புடனும் இரக்கத்துடனும் கூடிய உண்மையான உறவுக்குள் நுழைவதாகும். எனவே ஏழைகளைச் சந்திப்பது ஒரு ஆன்மீகச் சந்திப்பாக மாறுகிறது. ஏழ்மையிலும் துன்பத்திலும் கிறிஸ்துவைச் சந்திக்கும் ஓர் அரிய வாய்ப்பாக மாறுகின்றது. நம்பிக்கையாளர்கள் தங்கள் நேரம், அன்பு, அக்கறை ஆகியவற்றைப் ஏழைகளுடன் பகிரும்போது, அவர்கள் நமக்காக ஏழையாக ஆன கடவுளின் மனிஉரு எடுத்தலில் பங்கேற்கிறார்கள். இவ்வாறு, இந்த அனுபவம் இருவரையும் மாற்றுகிறது: உதவுகிறவர் மற்றவரின் முகத்தில் கிறிஸ்துவை அறிகிறார், உதவி பெறுகிறவர் இறைஅருளின் சாட்சியாக மாறுகிறார். இப்படிப்பட்ட சந்திப்புகளில்தான் திருஅவையின் இதயம் புதுப்பிக்கப்படுகிறது. **ஏழைகளில் கிறிஸ்துவை காணும் திருஅவை, தன் உண்மையான அடையாளத்தையும் புனிதத்துவத்தின் அழகையும் மீண்டும் கண்டடைகிறது.**

### 8 கருணை நீதி ஆகும் போது திருஅவையின் சமூகப் பணி மிளிர்கின்றது

இந்த போதனை, தனிப்பட்ட இரக்கச் செயல்களில் மட்டும் நிலைத்து நிற்காமல், அதைவிட ஆழமான ஒழுக்க மற்றும் சமூகப் பொறுப்பை நோக்கி நம்மை அழைக்கிறது. சமூகத்தில் புறக்கணிப்பு மற்றும் அநீதியை நிலைநிறுத்தும் அமைப்புகளை எதிர்கொள்ளத் திருஅவைக்கு அழைப்பு விடுக்கின்றது. நற்செய்தியின் ஒளியில், பசியுடன் இருப்பவர்களுக்கு உணவு கொடுக்கவும், வீடற்றவர்களுக்கு தங்கும் இடம் அளிப்பது என்பதற்கு மேலாக இத்தகைய பசி மற்றும் வீடற்ற நிலை ஏன் தொடர்கிறது என்கின்ற கேள்விக் கணைகளை எழுப்ப திருஅவை அழைக்கப்படுகிறது.

அதனால், திருஅவையின் பணி இரண்டு பிரிக்க முடியாத பரிமாணங்களைக் கொண்டது: உடனடி இரக்கம் மற்றும் நீண்டகால மாற்றம். உடனடி உதவி கிறிஸ்துவின் இரக்கத்தை வெளிப்படுத்தி, ஏழைகளின் உடனடி தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. நீண்டகாலப் பணி, சமூக, அரசியல், பொருளாதார அமைப்புகளில் உள்ள அநீதிகளை மாற்றும் நோக்கத்துடன் செயற்படுகிறது.

உண்மையான கிறிஸ்தவ சீடத்துவம் என்பது கருணையையும் நீதியையும் இணைப்பதாகும். அதாவது, உடனடி தேவைகளைப் பூர்த்தி செய்தபடியே, ஒவ்வொருவரும் டதண்புடனும் சமத்துவத்துடனும் வாழக் கூடிய புதிய உலகை உருவாக்கும் முயற்சியாகும். ஏழைகளின் சார்பு நிலை எடுப்பதே திருஅவையின் அடாயளமும் பணி மையமும் ஆகும்.
இதுவே "நான் உன்னை அன்பு செய்து வருகின்றேன் (Dilexi Te)" என்ற அப்போஸ்தலக் ஊக்கவுரையின் இதயத் துடிப்பு. அதாவது அன்பை செயலில் வெளிப்படுத்தி, நீதியை உலகில் நிலைநிறுத்தும் அழைப்பு

### 9 ஏழைகளைக் கவனிப்பது திருஅவையின் மையப்பணி

ஏழைகளுக்கான அக்கறை என்பது விருப்பத்திற்குரிய ஒரு செயல் அல்ல. அது கிறிஸ்தவ நம்பிக்கையின் மையக் கடமையாகும். இயேசு தாமே தம்மைத் தாழ்த்தப்பட்டவர்களுடனும் மறக்கப்பட்டவர்களுடனும் ஒன்றாக அடையாளப்படுத்தினார். அதிலிருந்தே திருஅவை தன் பணி நோக்கத்தை எடுத்துக்கொள்கிறது:
புறக்கணிக்கப்பட்டவர்களை அரவணைப்பதும், அவர்களுடன் நடப்பதும், அவர்களை உயர்த்துவதுமாகும்.
ஏழைகளைக் கவனிப்பது வெறும் இரக்கச் செயல் மட்டுமல்ல. இது நற்செய்தியின் பிரதிபலிப்பாகும். இது கிறிஸ்துவின் உடலாகிய திருஅவையின் உண்மையான அடையாளத்தை வெளிப்படுத்துகிறது, அங்கு கருணையும் நீதியும் ஒன்றிணைகின்றன. **ஏழைகளைக் கவனிக்க மறக்கும் திருஅவை, கிறிஸ்துவையே மறந்துவிடுகிறது.** ஏழைகளுடன் நிற்கும் திருஅவை தன் ஆண்டவருக்கு உண்மையாகவும், உலகின் முன் நம்பத்தகுந்ததாகவும் மாறுகிறது. எனவே, ஏழைகளுக்கான அக்கறை என்பது திருஅவையின் பல பணிகளில் ஒன்றல்ல, அது நற்செய்தியின் நம்பிக்கைக்கான உண்மைத்தன்மையின் அளவுகோல் ஆகும். இதுவே Dilexi Te ஆவணத்தின் ஆன்மாவும், நம் தற்காலத் திருஅவைக்கு நம் புதிய திருத்தந்தை விடுக்கும் அழைப்பும் அளவுகோலுமாகும்.

### முடிவுரை

"நான் உன்னை அன்பு செய்து வருகின்றேன் (Dilexi Te)" என்பதே அப்போஸ்தல ஊக்கவுரையின் அழைப்பு அன்பை வாழ்வாக மாற்றுவதே. நம்பிக்கையாளர்களையும் திருஅவையையும் ஒரே நேரத்தில் உள்ளிருந்து புதுப்பிக்க இவ் ஆவணம் அழைக்கிறது. இது நம் நம்பிக்கையை வெறும் உணர்ச்சியாக அல்ல, செயல்களில் வெளிப்படுத்தும் வாழ்வாக மாற்றுமாறு வலியுறுத்துகிறது. அன்பு, இரக்கம், மற்றும் நீதி- இவை மூன்றும் கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளங்கள். இவை இல்லாமல் நம்பிக்கை வெறும் வார்த்தையாகி விடுகிறது. ஒவ்வொரு விசுவாசியும் தன் தினசரி வாழ்வில் இதை நடைமுறையாக்க முடியும்: அயலவரின் குரலைக் கேட்க வேண்டும், நேரத்தைப் பகிரவேண்டும், அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டும், சமூகத்தில் மறக்கப்பட்டோருக்கு நம்பிக்கையாய் நிற்கவேண்டும். அதேபோல, திருஅவை நிறுவனங்கள் - பள்ளிகள், சமூக மையங்கள், சேவை அமைப்புகள்- தங்களது வளங்களையும் முயற்சிகளையும் மனித மாண்பு, நீதி, மற்றும் பரிவை வளர்க்கும் நோக்கில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இது ஒரு சுலபமான அழைப்பு அல்ல, ஆனால் ஒரு நம்பிக்கைமிக்க அழைப்பு. கிறிஸ்துவின் இதயத்தில் இருந்து பாயும் அன்பு, நம்மை மாற்றுவதன் மூலம், உலகத்தையும் மாற்றச் செய்கிறது. அந்த அன்பை நம் செயல்களில் வெளிப்படுத்தும் போது, திருஅவை உண்மையிலேயே கிறிஸ்துவின் உயிருள்ள சாட்சியாக மாறுகிறது. அன்பின் வழியே நீதியை நிலைநிறுத்தும் **திருஅவையாக நம் தலத்திருஅவை மாறட்டும். கிறிஸ்துவின் இதயம் நம் இதயமாகட்டும்.**




## ஏன் கேள்விக்கென்ன பதில்!

*(அருள், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: இன்றைய ஊடகங்கள் - வலைத்தளங்களால் ஏற்படும் நன்மைகள் உண்டு. இவை ஒருபுறமிருக்க இவற்றால் மக்களின் சிந்திக்கும் ஆற்றல் நலிவடைவது மட்டுமல்ல சிந்தனைப் போக்கில் பாரிய எதிர்மறைத் தாக்கங்களும் ஏற்படுகின்றனவே! இதுபற்றி மக்கள் விழிப்புணர்வு பெறுவது இன்றைய காலத்தின் தேவையல்லவா!?**

**பதில்:** படித்த விடயமொன்றை இங்கு பகிர்வது பலருக்கும் பயனுடையதாயிருக்கும் என நினைக்கிறேன்! கழுதை ஒன்று மரமொன்றில் கட்டப்பட்டிருந்தது. ஓரிரவு ஒரு பேய் கழுதையின் கயிற்றை அறுத்துவிட்டது. கழுதை விவசாயின் நிலத்தின் பயிர்களை தின்றுமுடித்தது. இதனால் கோபமடைந்த விவசாயியின் மனைவி கழுதையைச் சுட்டுக்கொன்றாள். சீற்றமடைந்த கழுதையின் உரிமையாளன் விவசாயின் மனைவியைப் பதிலுக்குச் சுட்டுக் கொன்றான். தன் மனைவியைக் கொன்று விட்டான் என்று கோபமடைந்த விவசாயி கழுதையின் உரிமையாளனைக் கொன்று பழிதீர்த்தான். கழுதையின் உரிமையாளனின் மனைவி கோபாவேசகம் கொண்டு அவளும் அவளுடைய மகன்களும் விவசாயின் வீட்டை தீக்கிரையாக்கினார்கள்! விவசாயி தனது வீடு தீக்கிரையானது என மனம்நொந்து கழுதையின் உரிமையாளனின் மனைவி, மகன்மாரைக் கொன்றான். இறுதியில், விவசாயி, வேதனையில் மூழ்கியிருந்தபோது பேயிடம் அது ஏன் அனைவரையும் கொன்றது என்று கேட்டது. பேய், "நான் யாரையும் கொல்லவில்லை! கயிற்றால் கட்டப்பட்டிருந்த கழுதையை நான் விடுவித்தேன். உங்களுக்குள் இருந்த பேயை நீங்கள் விடுவித்தீர்கள்! அதன் விளைவுதான் நடந்த அனைத்து மோசமான கொலைகளும் அழிவுகளும்!" என்றது. இன்று ஊடகங்கள் - வலைத்தளங்கள் பேயைப் போல மாறி விட்டன. அவை தினமும் கழுதைகளை விடுவித்துக் கொண்டு இருக்கின்றன. மக்கள் எந்தவித யோசனையும் இல்லாமல், நடந்ததை ஆராயாமல், நடந்துகொள்வதால் ஒருவரை ஒருவர் அழிப்பதில் ஈடுபடுகிறார்கள். எனவே ஊடகங்கள் - சமூக வலைத்தளங்கள் விடுவிக்கும் - கழுதைகளுக்கு (வெளியிடும் செய்திகள், தகவல்கள், பேட்டிகள் ஒவ்வொன்றுக்கும்) எதிர் வினையாற்றாமல் பொறுப்புடன் நடந்து கொள்வது நமது இன்றைய காலத்தின் பெரும் கடமையாகிறது. நமது உறவுகளைப் பேணவும், உண்மைகளைக் கண்டறிந்து கொள்ளவும், கட்டவிழ்த்து விடப்படும் கழுதைகளின் (ஊடக, வலைத்தள அனைத்து விடயங்களின்) மட்டில் நாம் கவனமாக, விவேகமாக, விழிப்புடன் நடந்துகொள்ள வேண்டும்!

*(ராஜன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: வாழ்க்கையில் சில மனிதர்களுடனான அனுபவங்களின் பின்னர்தான் அளவாகப் பேசி, அளவாகப் பழகி, அளவோடு அனைத்தையும் வைத்துக்கொண்டால் அனைத்தும் ஆரோக்கியமாக இருக்கும் என்ற எண்ணம் வருகிறது! இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**பதில்:** ராஜன், உங்கள் கேள்வியைப் படித்தபோது, 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு' என்ற பழமொழியும் "அளவோடு இருந்திருக்கலாம் என்ற அறிவு அத்தனையும் அனுபவித்த பின்புதான் வருகிறது!" என்ற ஒருவரின் கூற்றும்தான் என் நினைவுக்கு வருகின்றன! எதுவும் அளவோடு இருப்பதுதானே ஆரோக்கியம்!

*(ஜீவன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: இன்றைய அரசியல்வாதிகளின் நிலையைப்பற்றிக் கூறுவீர்களா?**

**பதில்:** விவசாயி ஒருவன் விமானத்தில் வந்த அரசி யல்வாதிகளுடன் விமானத்தில் பயணித்தான். அவ்விமானத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக விமானம் விழுந்து நொறுங்கியது. அவ்விடத்திற்கு வந்த பொலிசார் விவசாயிடம் எவ்வாறு விமான விபத்து நடந்தது என்பது பற்றி விசாரித்தனர். விவசாயி, "விமானத்தில் இருந்தவர்கள் எல்லாரும் இறந்துபோனதால் அவர்களை அடக்கம்செய்தேன்!" என்றார். அப்பொலிஸ்காரர்களின் ஒருவன், 'அவர்கள் எல்லோரும் இறந்துபோனார்கள் என்பது உனக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டதற்கு அவ் விவசாயி, "கொஞ்சப் பேர், 'எங்களைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்! நாங்கள் உயிருடன்தான் இருக்கிறோம்' என்று கத்தினார்கள்! நமது அரசியல்வாதிகளைப் பற்றி உங்களுக்குத் தெரியும்தானே, பொய்பொய்யாய்ச் சொல்வார்கள் என்பதனால் அவர்கள் உயிருடன் இருப்பதாகச் சொல்லி அவர்கள் கத்தியதை நான் நம்பவில்லை! எல்லோரையும் அடக்கம் செய்துவிட்டேன்!" என்றான். அரசியல்வாதிகளைப்பற்றி சாதாரண மக்கள் வைத்திருக்கும் எண்ணம் ஓரளவிற்கு இவ்விவசாயின் எண்ணத்தைப் போன்றதுதான்!

## யாழ் புனித மரியன்னை பேராலயப் பங்கின் பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு



யாழ் புனித மரியன்னை பேராலயப் பங்கின் பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் வழங்கும் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் யாழ் ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்ற அருட்பொழிவுத் திருப்பலியில் 108 பிள்ளைகள் அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டனர்.

## நற்கருணைப்பணியாளர் நியமனம்



முல்லைத்தீவு மறைக்கோட்டம் உடையார்கட்டு புனித யூதாததேயு ஆலயத்தில் நற்கருணைப் பணியாளரை ஏற்படுத்தும் நிகழ்வு கடந்த 25ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அல்வின் அவர்களின் ஏற்பாட்டில் யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் செல்வி அமிர்தநாதர் எமறன்சியானா அவர்கள் நற்கருணைப் பணியாளராக ஏற்படுத்தப்பட்டார். அருட்தந்தை மவுலிஸ் அவர்களின் வழிகாட்டலில் அருட்தந்தை பயஸ் இருதயதாஸ் அவர்களின் உருவாக்கத்தில் பயிற்சிபெற்ற இவர் நீண்டகாலமாகக் கல்வி பணியில் ஈடுபட்டுவருவதுடன் தற்போது முல்லைத்தீவு குரவில் மகாவித்தியாலயத்தின் துணை அதிபராக பணியாற்றி வருகின்றார். செல்வி அமிர்தநாதர் எமறன்சியானா உடையார்கட்டு பங்கில் ஏற்படுத்தப்பட்ட முதலாவது நற்கருணைப்பணியாளரென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## 2026ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்தம் தொடர்பான செயலமர்வு



யாழ். கல்வி வலயப் பாடசாலைகளின் கத்தோலிக்க திருமறை கிறிஸ்தவ பாட ஆசிரியர்களுக்கான 2026ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்தம் தொடர்பான செயலமர்வு கடந்த 23ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரை யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இச்செயலமர்வில் யாழ். கல்வி வலயக் கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் விக்டோரியா எல்விஸ் பிறஸ்லி, ஆசிரியர்கள் திருமதி தோமஸ் மற்றும் கெனத்மேரி ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து புதிய கல்வி சீர்திருத்த அறிமுகம், கற்பித்தல் முறை, மதிப்பீட்டு முறை தொடர்பாக ஆசிரியர்களை வழிப்படுத்தினர். இந்நிகழ்வில் 2026ஆம் ஆண்டு தரம் 06 மாணவர்களுக்குக் கத்தோலிக்க திருமறைக் கிறிஸ்தவ பாடத்தை கற்பிக்கவுள்ள 60 வரையான ஆசிரியர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

## உலக மறைபரப்பு ஞாயிறு தின நிதிப்பங்களிப்பில் கட்டைக்காடுப் பங்கு முன்நிலையில்



ஆண்டு தோறும் உலக மறைபரப்புப் பணிக்காக இறைமக்களிடம் காணிக்கை வேண்டுவது நாம் அறிந்ததே. இறைமக்கள் தமது தாராள நிதியுதவியுடன் பங்கில் பல சிறப்பு வழிகளில் கூடுதல் பணத்தை இப்பணிக்காக வழங்கி வருவார்கள். அவ்வகையில் இவ்வாண்டு யாழ் மறைமாவட்டத்தில் கட்டைக்காடு பங்கு மக்கள் விசேட சிறப்பு நிகழ்வுகளை நடாத்திப் பெற்ற பணத்துடன் தங்களின் காணிக்கைத் தொகையையும் இணைத்து மொத்தம் ரூபா மூன்று இலட்சத்து அறுபத்தி ஆறாயிரத்து இருநூற்று அறுபது ரூபாவை சேகரித்தமை (366,260/=) குறிப்பிடத்தக்கதும் பாராட்டுதலுக்குரியதுமாகும்.

இப் பங்களிப்புக் குறித்து பங்குத்தந்தை அருட்பணி எஸ்.வசந்தன் அடிகளாருடன் தொடர்பு கொண்டு வினவியபோது பங்கு மக்கள் பக்திச்சபைகளாக இணைந்து உணவுப் பண்டங்களைத் தயாரித்து விற்பனை செய்ததாகவும், ஏனைய இதர பாவனைப் பொருட்களை பொதுச் சந்தை நிகழ்வில் அமைத்து விற்பனை செய்து பெற்ற வருவாய்த் தொகையுடன் தமது தாராள பங்களிப்பையும் சேர்த்து வழங்கியமையாலேயே இத்தொகையைப் பெற முடிந்தது எனக்குறிப்பிட்டார். இது ஏனைய பங்குகளுக்கு ஆர்வத்தைத் தூண்டிய நிகழ்வாக அமைகின்றது.

## சுண்டுக்குளிப் பங்கில் மறைக்கல்விக் கண்காட்சி



யூபிலி ஆண்டு சிறப்பு நிகழ்வாக சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலய மறைக்கல்வி மாணவர்களும் மறையாசிரியர்களும் இணைந்து முன்னெடுத்த மறைக்கல்விக் கண்காட்சி கடந்த 26ஆம் திகதி ஆலய வளாகத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட் தந்தை சகாயநாயகம் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை டியூக் வின்சன்ட் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். இக்கண்காட்சியில் யூபிலி ஆண்டு மற்றும் மீட்பின் வரலாற்று நிகழ்வுகளான காயின் ஆபேல் பலி, நோவாவின் பெட்டகம், ஆபிரகாமின் அழைப்பு, மோசேயின் அழைப்பு, மெசியாவைப் பற்றிய திருமுழுக்கு யோவானின் அறிவிப்பு, சீனாய் உடன்படிக்கை, இயேசுவின் வாழ்வு, நற்கருணையின் புதுமைகள் என்பன காணொளி ஊடாகவும், மாணவர்களின் ஆற்றுகையூடாகவும் காட்சிப்படுத்தப்பட்டன. இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோரிகள், பங்குமக்கள், அயற்பங்கு மறைக்கல்வி மாணவர்கள், மறையாசிரியர்களெனப் பலரும் பங்குபற்றியிருந்தனர்.

## குருநகரப் பங்கில் சிறப்புச் சந்தை



மறைபரப்பு ஞாயிறு தினத்தை முன்னிட்டு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு கடந்த 26ஆம் திகதி நடைபெற்றது. பங்குத் தந்தை அருட்தந்தை அருளானந்தம் யாவிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட பாப்பிறை மறைபரப்பு சபைகளின் இயக்குநர் அருட்தந்தை எயின்சிலி றொசான் அவர்களின் தலைமையில் திருப்பலியும் தொடர்ந்து பக்திச் சபையினரின் சந்தை நிகழ்வும், இளையோரின் பேய்வீடு, மகளிர் மன்றத்தின் சீட்டிழுப்பு என்பனவும் நடைபெற்றன. இந்நிகழ்வில் பங்குமக்கள் ஆர்வத்துடன் பங்கு பற்றியிருந்தனர்.

## அச்சுவேலிப் பங்கில் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு



அச்சுவேலிப் பங்கில் பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 30ஆம் திகதி நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் புனித சூசையப்பர் ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பலியில் புனித சூசையப்பர், புனித அந்தோனியார், நவக்கிரி புனித நீற்றம்மாள் ஆலயங்களை சேர்ந்த 43 மாணவர்கள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டனர்.

## போதைப்பொருள் விழிப்புணர்வுக் கருத்தமர்வு



கிளிநொச்சி மறைக்கோட்டப் பொதுநிலையினர் கழகத்தின் ஏற்பாட்டில் வட்டக்கச்சிப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள் விழிப்புணர்வுக் கருத்தமர்வு கடந்த 26ஆம் திகதி நடைபெற்றது. கழக இயக்குநர் அருட்தந்தை நியூமன் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் வட்டக்கச்சிப் பங்குத்தந்தை அருட்தந்தை ராஜ் டிலக்சன் அவர்களின் உதவியுடன் நாவல்நகர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்ற இக்கருத்தமர்வில் கரைச்சி பிரதேச செயலக சிரேஸ்ட கிராம அலுவலர் திரு. சத்தியநாதன் அவர்கள் வளவாளராகக் கலந்து பங்குமக்களை வழிப்படுத்தினார். இந்நிகழ்வில் 60ற்கும் அதிகமானவர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

## சுண்டுக்குளிப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட செபமாலைப் பேரணி



வணக்கமாத நிறைவை முன்னிட்டு சுண்டுக்குளிப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட செபமாலைப் பேரணியும் அன்னையின் திருச்சொருப் பவனியும் ஐப்பசி மாதம் 31ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை சகாயநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இப்பேரணி புனித யுவானியார் ஆலயத்தில் ஆரம்பமாகி புனித திரேசாள் ஆலயத்தைச் சென்றடைந்து அங்கு கிளறேசியன் சபை அருட்தந்தை அருள்றாஜ் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற திருப்பலியுடன் நிறைவடைந்தது. திருப்பலி நிறைவில் அன்னையின் திருச்சொருப ஆசீர் நடைபெற்றதுடன் இப்பேரணியில் பங்குமக்கள் பக்தியுடன் பங்குபற்றியிருந்தனர்.

## மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் மறையாசிரியர்களுக்கான சிறப்பு நிகழ்வு

யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலையத்தினால் நெடுந்தீவுப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் மறையாசிரியர்களுக்கான சிறப்பு நிகழ்வு கடந்த 19ஆம் திகதி நடைபெற்றது. நெடுந்தீவுப்பங்குத்தந்தை அருட்தந்தை பத்திநாதன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்தந்தை டியூக் வின்சன்ட் அவர்களின் வழிநடத்தலில் புனித யுவானியார் ஆலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கருத்துரைகள், குழுச் செயற்பாடுகள், விளையாட்டுக்கள், கற்பித்தல் என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வில் 200 மறைக்கல்வி மாணவர்களும் 15 மறையாசிரியர்களும் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

## மறைக்கல்வி வாரச் சிறப்பு நிகழ்வுகள்



உரும்பிராய்ப் பங்கின் மறைக்கல்வி வாரச் சிறப்பு நிகழ்வுகள் கடந்த 13ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை நடைபெற்றன. பங்குத்தந்தை அருட்தந்தை அகஸ்ரின் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திருப்பலி, விளையாட்டு நிகழ்வுகள், கலை நிகழ்வுகள், கள அனுபவச் சுற்றுலா என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வுகளில் மறைக்கல்வி மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2025ம் ஆண்டு கார்த்திகை மாதம் 02ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.